மகிழ்ச்சி

நந்தன
மாசி

PUBLIC LI
JUL 1958
MADRAS

4
அணா

சித்திரக்க மாத இதழ்

விருதுநகரில் பிரபல திருமணங்கள்.



மங்களேஸ்வரி — அருணாசலம்

எனது மகள் செல்வி மங்களேஸ்வரி (B.A.,)க்கும், நாட்டாண்மை திரு, N. K. துரைச்சாமி நாடார் மகன் செல்வன் அருணாசலம் M. A., (ECONOMIC INVESTIGATOR. TIRUCHIRAPALLI CIRCLE GOVT. OF MADRAS.) க்கும் 25—1—1953ல் நடைபெற்ற திருமணத்தின்போது வந்து சிறப்பித்தவர்களுக்கும், பரிசுகள், வாழ்த்துக்கள் வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

P. P. M. சங்கரலிங்க நாடார்,

தனுஷ்கோடி விலாஸ் சுருட்டுத் தொழிற்சாலை.

பிராஞ்சு: அருப்புக்கோட்டை :: விருதுநகர்.

எனது மகள் செல்வி பிரகாசிக்கும், திரு. கொ.சி.மா. கிருஷ்ண நாடார் மகன் செல்வன் சின்னக்கனிக்கும் 26—1—1953ல விருதுநகரில் நடைபெற்ற திருமணத்தின்போது வந்து சிறப்பித்தவர்களுக்கும், வாழ்த்துக்கள் அனுப்பியும், பரிசுகள் வழங்கியும் மகிழ்வித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பிரகாசி — சின்னக்கனி

T. V. நாராயண நாடார், (விருதுநகர்.)

பாக்கு & பருப்பு வியாபாரம்,

ஓக்மாஞ்சி ஸ்கொயர், :: *கொழும்பு-14.*

பணம்! பணம்!! பணம்!!!

"எங்கே தேடுவேன்—பணத்தை எங்கே தேடுவேன்
உலகம் செழிக்க உதவும் பணத்தை எங்கே தேடுவேன்" என்று எங்கேயும் யாரும் தேடிக்கொண்டிருக்க வேண்டாம்! கருணாநிதி, கணேசன் புகைப்படத்துடன், சினிமாவில் உள்ளது உள்ளபடியே 100க்கு 100 சரியான வசனம், பாடல் நிறைந்த அழகிய, புதிய பதிப்பு.

விலை 6 அணா
விற்பனைக்கு 100பிரதி ரூ. 25

செல்வம் பதிப்பகம்,
வெங்கலக்கடைத் தெரு,
மதுரை.

தனி அரசு
(தி.மு.கழக மாதமிருமுறைஇதழ்)
தனிப் பிரதி 0—2—0
ஆண்டுக் கட்டணம் ரூ. 3—0—0
ஆசிரியர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடியவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்
கோயமுத்தூர் :: திண்டுக்கல்
ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் விண்ணப்பிக்கவும்.
தனி அரசு, விருதுநகர்.

மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்
ஆசிரியர்: நா. சதானந்தம்
விருதுநகர்.

தி. ஆ. 1984—மாசி 1.
ஆண்டு 4] 12-2-53 [மாதம் 9

MADRAS 1 JUL 1955

பொருளடக்கம்

தமிழருக்குச் சோதனை!	3
அட்டைப்பட விளக்கம்	6
வாழ்க்கைத்துணை —போட்டிக் கட்டுரை	7
முள்—தொடர் கதை	9
தெறித்த முத்துக்கள்	15
சீர்திருத்தவாதி	17
கார்டியோபோன்	25
புயலுக்குப்பின்	27
பணம்—கவிதை	30
எதைச் செய்வது?	32
இதுநிஜமா?	35
ஏமாந்தவர் யார்?	37
எனது பட்ஜெட் —கார்டுப் போட்டி 4	40
சந்தேகம் ஒழிக	42
அன்பு மனைவிக்கு......	45
அறிவுப் பூங்கா	48
என்வீடு—பட விமர்சனம்	50
நேயர் தபால்	52
ஞா. சோ. போட்டி 11	53

கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

புத்தகக் கண்காட்சி

விருதுநகரில் 22-3-1953 முதல் 3-4-53 முடிய நடைபெறவிருக்கும் 7வது அகில இந்திய கைத்தொழில் பொருட்காட்சியில் நம் மகிழ்ச்சி இல்லத்தின் சார்பாக புத்தகக் கண்காட்சி ஒன்று சிறந்த முறையில் அமைத்து, தமிழகத்தை விழிப்படையச் செய்த விற்பன்ன சிலர்களின் கருத்தோவியங்களாம் புத்தகங்களை அலங்காரமாக அடுக்கி ஆக்கவேலைகளின் திறனை மக்கள்பார்வைக்கு வைக்க முடிவு செய்து, வேண்டிய வேலைகள் விரைவாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. இதற்குத் தனிப்பட்டவர்களும், புத்தக வெளியீடுதார்களும் ஒத்துழைக்க வேண்டுகிறோம்

தங்கள் வெளியீடுகளிலிருந்து ஒவ்வொரு புத்தகம் காட்சிக்காக அனுப்பிவைக்க வேண்டும். இது திரும்ப அனுப்பப்படமாட்டாது.

மேற்கொண்டு விற்பனைக்கு அனுப்ப விரும்புபவர்கள் கீழ்க்கண்ட முறையில் புத்தகங்கள் அனுப்ப வேண்டும்.

8 அணாவும் அதற்குக் குறைவாகவும் உள்ளவை வகைக்கு 5
8 அணாவிற்கு மேல் 1 ரூபாய்க்குள் உள்ளவை வகைக்கு 3
1 ரூபாய்க்கு மேல் விலையுள்ள புத்தகங்கள் வகைக்கு 2
2 அணாவும் அதற்கும் குறைந்த சிறுவர் வெளியீடுகள் 10

விற்பனைக்குரிய கணக்கும், மீந்த புத்தகங்களும் பொருட்காட்சி முடிந்த ஒரு வாரத்திற்குள் கமிஷன் நீக்கி கணக்கு முடித்து அனுப்பப்படும்.

புத்தகங்கள் அனுப்பும் செலவு பூராவும் புத்தக வெளியீடுதார்களைச் சேர்ந்ததே.

புத்தக வெளியீடுதாரர்களின் முழு விலாசங்கள் பெரிய எழுத்தில் பொறிக்கப்பட்டு அதன் அருகில் அவர்களது புத்தகங்கள் அழகாக, அலங்காரமாக வைக்கப்படும்.

புத்தகங்கள் அனுப்பவேண்டிய விலாசம்:

மகிழ்ச்சி இல்லம் :: விருதுநகர்

தமிழனுக்குச் சோதனை!

ஆந்திரப் பிரிவினை குறித்து நிலைமையை நேரில் அறிந்து ரிப்போர்ட் சமர்ப்பிக்க இந்திய அரசினரால் நியமிக்கப்பட்ட நீதிபதி வாஞ்சு அவர்கள், தனது வேலையை முடித்து யதாஸ்தையும் சமர்ப்பித்துவிட்டார். அத்துடன் தனது சிபாரிசுகளையும் வழங்கி இருக்கிறாராம்.

இவரது சிபாரிசுபற்றி பலபல ஹேஷ்யங்கள் உலவுகின்றன. அவற்றுள் சமீபத்தில்வெளிவந்த பத்திரிகைச் செய்தி ஒன்று தமிழர்களைத் திடுக்கிடவைத்துள்ளது "சென்னை நகரில் ஆந்திரர்கள் ஐந்து ஆண்டு காலத்திற்கு தற்காலிக தலைநகரை அமைத்துக் கொள்ளலாம்" என்று அவர் சிபாரிசு செய்திருப்பதாக கூறும் செய்திதான் அது.

சென்னைநகரமற்ற ஆந்திர மாகாணம் அமைக்கும் அடிப்படையில்தான் இந்தியஅரசினர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இது விஷயத்தை திரு வாஞ்சு அவர்கள்கூட சென்னை வந்தவுடன் அறிவித்தார். எனவே மேற்கண்டபடி திரு.வாஞ்சு அவர்கள் சிபாரிசு செய்திருக்க மாட்டார் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை என்றாலும், 'அரசியல் ஒரு சூதாட்ட மேடை' என்ற காரணத்தால் ஏதாவது விபரீத எண்ணம் உதித்து, ஏறுக்குமாறாக முடிவு செய்திருந்து. அதற்கு இந்திய சர்க்காரும் ஒத்துத் தாளம் போட நேர்ந்தால் அது தமிழருக்கு இழைக்கும் பெரும் துரோகம் என்று கூறத் தேவையில்லை. இதை மானமுள்ள தமிழன் எவனும் சகிக்கமாட்டான்.

'பாரதநோக்கம்' என்ற போர்வையில் இவ்விஷயத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த எந்தக்கட்சி தலை அசைத்தாலும், அவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கருங்காலிகளே. மத்திய சர்க்காருடன் நெருங்கிய தொடர்பு கொண்ட காங்கிரஸ் இதுவிஷ

நன்றி

பல நூற்றுக்கணக்கான நேயர்கள், 'மகிழ்ச்சி' ஏஜண்டுகள், புத்தக வெளியீடு அலுவலகத்தார்கள், அச்சகத் தொடர்பு சார்ந்தவர்கள் முதலிய அன்பர்கள் அனுப்பிய புத்தாண்டு & தைப்பொங்கல்வாழ்த்துக்கள் கிடைக்கப்பெற்றோம். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பதில் எழுத இயலவில்லை. மன்னிக்கவும். அனைவருக்கும் இதன்மூலம் எங்கள் உளம் நிறைந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர். — நா. சதானந்தம், ஆசிரியர்.

யத்தில் மிகுந்த கவனத்துடனும் அக்கரையுடனும் இருக்கவேண்டும். தமிழ்நாடு காங்கிரஸ், தாங்கள் இயற்றிய "தற்காலிகமாகக் கூட சென்னையில் ஆந்திரத் தலைநகர் இருக்கக்கூடாது" என்ற தீர்மானத்தை மேலிடத்தின் வேண்டுகோள் என்றதற்காக வளைந்துகொடுக்கும் பிரம்பாக்கி விடக்கூடாது. சென்னையில் தற்காலிக தலைநகருக்கு இடங்கொடுக்க நேர்ந்தால், அத்துடன் தமிழர் சென்னையை மறந்துவிட வேண்டியதுதான். பின்பு சென்னை தனிமாகாணம் என்பதை நிச்சயமாக இடபொழுதே முடிவு செய்துகொள்ளுங்கள். இப்படி நாம் கூறுவதற்கு ஆதாரமில்லாமலில்லை. இதுவரை இந்திய அரசினரோ அல்லது நேருவோ கூறம்போதெல்லாம் "ஆந்திரர் சென்னையைக் கேட்கக் கூடாது" என்றுதான் கூறுகிறார்களேதவிர, "சென்னை தமிழ்நாட்டினுடையதுதான்" என்று திட்டவட்டமாகக்கூறியது கிடையாது.

சென்னையை தனிமாகாணமாக்க இங்கு ஓர் கங்காணிக் கூட்டம் காத்திருக்கிறது. இந்தச்சந்தர்ப்பதனைப் பயன்படுத்தி இவர்கள் தங்களது திரைமறைவு வேலையை வெற்றியுடன்முடித்து தனி மாகாணமாக்கிவிடுவார்கள். எனவே ஒவ்வொரு தமிழனும், குறிப்பாக இங்குள்ள ஒவ்வொரு அரசியல் கட்சியினரும் எச்சரிக்கையுடனும்,விழிப்புடனுமிருந்து காரியமாற்ற வேண்டுகிறோம்.

சென்னை கார்ப்பரேஷனும் மகிழ்ச்சியும்

நாம் நமது 'மகிழ்ச்சி' கார்த்திகை (16—11—52) இதழில் "இலவச கர்ப்பத்தடை ஆஸ்பத்திரிகள் முக்கிய நகரங்கள் பூராவிலும் திறக்கப்பட வேண்டும்" என எழுதியிருந்தோம். இதோ சென்னை கார்ப்பரேஷன் முதலாவதாக நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துவிட்டது.

"சென்னைநகரிலுள்ள கார்ப்பரேஷனின் 30 சிசு சம்ரக்ஷணை நிலையங்களில் விசேஷ பயிற்சி பெற்ற லேடிடாக்டர்கள் இலவச ஆலோசனைகள் கூறுவர். சூளை, ஜார்ஜ டவுன், வண்ணாரப்பேட்டை ஆகிய மூன்று இடங்களிலுள்ளநிலையங்களில் கருத்தடைச் சாதனங்கள் பிரதி திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மாலை 3-30 மணி முதல் 5-30 மணி வரை ரூ 3—10—0 விலையுள்ளதை, அணா 8க்கு (குறைந்த விலையில்) தேவைப்படும் பெண்

அருப்புக்கோட்டை
ஆறுமுகம் களிம்பு
எந்த ரணமாயிருந்தாலும் இதைத் துணியில் தடவி உபயோகித்தால் சீழ் ஜலத்தை வெளியேற்றி ஆற்றும்
அ. ராமமு ஆறுமுக பாண்டியனால் தயாரித்தது.

களுக்குவழங்குவதென்றும், ஒரு முறை வாங்கினால் ஒரு வருடம் வரை பயன்படுத்தலாம் எனவும், 8 அணுகூட கொடுத்து வாங்க முடியாத பெண்களுக்கு கார்ப்பரேஷன் இலவசமாகவே வழங்கும் என்றும்'' தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள்.

சென்னைக் கார்ப்பரேஷனின் இம் முன்னேக்ககரமான செய்கையை மற்றைய நகரங்களின் நகரசபைகளும் உடனே மேற்கொண்டு நற்பணிபுரிய வேண்டுகிறோம்.

இத்துடன் நில்லாது படிப்படியாக சாஸ்வத கர்ப்பத்தடை முறைகளையும் இலவசமுறையில் செய்ய முன்வரவேண்டும். சாஸ்வத தடைமுறை பெண்களைவிட ஆடவர்களுக்குச் செய்வதுதான் சிரமமற்றதும், அபாயமற்றதுமாகும்என டாக்டர்கள் கூறுவதால் பொருளாதாரம் இடம் கொடுக்காத ஏழை ஆடவருக்கு இலவச உதவி புரிவது முதற்கடமையாக்கப்படவேண்டும்.

முற்போக்குத் தீர்மானங்கள் நிறைவேற்றிய சென்னை கார்ப்பரேஷன்நிர்வாகிகளுக்கு மகிழ்ச்சியின் வாழ்த்துக்கள.

அட்டைப்பட விளக்கம்:

விருதுநகர் மாதர் சங்கத்தின் 19வது ஆண்டுவிழா 18-1-53 ஞாயிற்றுக்கிழமை மாலை, மாதர் சங்கக் கட்டிடத்தில், சிவகாசி வைஸ்சேர்மன் உயர்திரு. ஞானகிரி அவர்களின் மனைவி திருமதி G. செண்பகத்தாய் அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். "பெண்மக்களின் தனியுரிமை" என்னும் பொருள்பற்றி செல்வி: சீதாசங்கிலி B.A., B.T அவர்கள் பொருள் பொதிந்த கருத்துக்களுடன் சொற்பொழிவாற்றினார். திரு. ச. வெள்ளைச்சாமி அவர்கள் குறைந்த குழந்தைப்பேறுடன் சிறந்த வாழ்வு வாழ பெண்கள் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென அழகாகப் பேசினார். திருமதி திலகவதி சதானந்தம் அவர்கள் சங்க வரலாறு குறித்து தனது கோஷ்டியுடன் "கதா காலக்ஷேபம்" இசையுடன் நிகழ்த்தினார்.

இடையில் நடைபெற்ற மாதர் 'மாறுவேடப் போட்டியில்' கலந்துகொண்ட பெண்களின் மாறுவேட உருவத் தோற்றங்கள்தான் நமது 'மகிழ்ச்சி'யின் இம்மாத அட்டையைப் பரிமளித்து நிற்பதாகும். மிகுந்த சிறப்புடன் நடைபெற்ற இவ் ஆண்டுவிழா நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைத்த சங்கப் பொருளாளர் திருமதி C. சரஸ்வதியம்மாள் யாவரின் பாராட்டுதலுக்குரியவரானார்.

போட்டோ: நா. சதானந்தம்

விருதுநகர் நியூ முத்துவில்

நாகையா, TR ராஜகுமாரி, TS பாலையா நடித்த

என் வீடு இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகிறது!

எமது அடுத்த புதிய வெளியீடு:

லலிதா, பத்மினி, NT ராமராவ், சகஸ்ரநாமம், TR ராமச்சந்திரன் மற்றும் பலர் நடித்த

கிருஷ்ணா பிக்சர்ஸ் **மருமகள்** தமிழ் சமூக சீர்திருத்தப் படம்

4வது போட்டி பரிசுக்கட்டுரை

வாழ்க்கைத் துணை

விஜி. கோபாலன், குடந்தை.

மலைகள் விண்ணைத் தழுவி முத்தமிட்டு நிற்பதும், ஆறுகள் விரைவில் சென்று ஆழியில் கலப்பதும், அலைகள் ஒன்றோடொன்று அணைத்துக்கொண்டு ஆர்ப்பரித்து வருவதும், பச்சைப் பசுங்கொடிகள் பருத்தமரங்களை கட்டித்தழுவி நிற்பதும், பறவைகள் ஆணும் பெண்ணுமாகக்கூடி நிற்பதும் எதை அறிவிக்கின்றது? அவைகளின் ஒவ்வொரு வகையான வாழ்க்கைத் துணையை அன்றோ? அவைகள் அம்மட்டோடு அமைகின்றனா? இல்லை—அவற்றுடன் இன்பத்தையும் அழகையும் நுகர்தலையும் அறிவிக்கின்றதல்லவா? இயற்கையின் கூறுகளே இவ்வின்ப நலங்களை நன்குநுகரும்போது பகுத்தறிவு படைத்த மனிதன்மட்டும்என்ன அதற்கு விதிவிலக்கா?

மனிதன் இத்தகைய இன்பத்தையும் அழகையும் ஒருங்கே அடைவது இல்லறத்திலேயாகும். ஒத்த உள்ளமும், ஒத்த அறிவும், ஒத்த குணமும் உடைய ஒருவனும் ஒருத்தியும்கூடி நடாத்தும் இல்லற வாழ்வு, வானுலக வாழ்வினும் மங்காத மகிழ்ச்சியோடு நீடுமிளிரும்என்பதில் ஐயமில்லை. ஆதிகால மனிதன் காடாந்திரங்களிலே சுற்றித் திரியும்போது ஓர் கன்னியைக் கண்டான்! வியப்புற்றான்! உணர்ச்சியால் உந்தப்பட்டு அவளைக் கட்டித் தழுவிக்கொண்டான்! இன்பங் கண்டான்! அப்படியே வாழ்க்கைத் துணைவியும் மனிதனுக்கு அமைந்துவிட்டாள்.

'வாழ்க்கைத் துணை' என்பது பொதுவாக இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியையேகுறிக்கும். அவள் யாவரிடத்தும் இன்முகம் காட்டி நன்மொழி பேசிப் பொன்னெனச் சிறந்து விளங்க வேண்டும்; ஏழைகள்பால் இரக்கங் காட்டி இன்னமதூட்டிக் குறைகளையோட்டி நாட்டினர் போற்ற நறுங்குணச் செல்வியாய்த் திகழ்தல் வேண்டும்; அவள் கணவனுக்குச் செய்ய

கட்டுரைப் போட்டி 5

என்னைக் கவர்ந்த புத்தகங்கள்!

பரிசு ரூ. 2

இரண்டு பக்கங்களுக்குள் அமையும்படி எழுதி 25-2-53க்குள் அனுப்புக.

வேண்டிய கடமைகளை ஆர்வமுடன் செய்து அவன் காட்டும் அன்பாம் அமுதத்தை நாடோறும் பருகி இன்ப வெள்ளத்தில் நீந்திக் களித்தல் வேண்டும்; கொழுநனையே குலதெய்வமெனப் போற்றிக் குவலயம் மதிக்கத் தானும் தன் கணவனும் வாழ்க்கையை செம்மையுடன் நடத்த வேண்டும்.

இனி, மனைவிமட்டுமே ஒருவனுக்கு 'வாழ்க்கைத்துணை' என்று கூறிவிட முடியாது. அவள் அவன் அன்பிற்காகவே வாழலாம்; அவ்வன்பிலேயே ஆவியையும் துறக்கலாம்; அவனுக்கு இன்பத்தை அளிக்கலாம்; இல்லத்தை புன்னகையால் ஒளி பெறச் செய்யலாம். ஆனால் மனைவியை விடுத்து மனிதன் எத்துணையோ துணைகளைப் பெற வேண்டியதாயிருக்கிறது. அவனுக்கு நண்பர் பலரும், நல்லறிவாளர் பலரும், நானிலம் மெச்சிடும் நல்ல நூல்கள் பலவும் வாழ்க்கையின் வழிகாட்டிகள் தானே! மனிதன் தனி முறையில் செய்யக்கூடாத—முடியாத செயல்கள் எத்தனையோ உண்டு!

"தன்னுடைய மற்றொரு படி வந்தான் நண்பன்" என்று சிறப்பித்துக் கூறப்படும் நண்பன் ஒருவன் இல்லையானால், மனிதனுக்கு வாழ்க்கை மேடையிலே இடமே இல்லை என்று கூறிவிடலாம். கலத்தைச் செலுத்திச் செல்லும் காந்த ஊசி போல, மனிதனுடைய வாழ்க்கையைச் செம்மையுடன் செலுத்திச் செல்ல நல்லறிவாளரும் நல்ல நூல்களும் சிறந்த துணைகளாகவே அமைகின்றன. சுருங்கச்சொன்னால் உலகமும் அதில் உள்ள பொருள்கள் யாவும் மனிதனுக்குச் சிறந்த துணைகளேயாம்.

விருதுநகர் ஸ்ரீ ராதாவில்
அஞ்சலிதேவி, நாகேஸ்வரராவ், ரேலங்கி,
சிவாஜி கணேசன், பண்டரிபாய், வசந்தா நடித்த
பூங்கோதை
இணையற்ற 3வது வாரமாக
இப்பொழுது நடைபெறுகிறது!

[கடந்த கதை: ராமனும் ஜானகியும் காதலிக்கின்றனர். ராமன் மீதுள்ள காதலை கைவிடும்படி ஜானகியின் பாட்டி அவளைக்கண்டிக்கிறாள். பின்...]

5

ஜானகி

ராமர் சரியானகுறும்புக்காரர். அவர் பேச்சில் ஒரே கிண்டல் இருந்தது; ஆனாலும் அதுதான் எனக்குக் கற்கண்டாகஇருந்தது. அவர் பேச்சும் விழிகளின் வீச்சும் தேனும் பாலும் கலந்த தித்திப்பாக இருந்தது.

முள் வேலியைக்கூட கடந்து வந்துவிட்டார். அப்போது அவர் பஞ்சுப் பாதத்திலே நறுக்கென்று ஒரு முள் கூட குத்திவிட்டது. அவர் காலைப்பிடித்து வலியில்லாமல் முள்ளை பிடுங்கி எறிய சந்தர்ப்பமும் சமயமும் சரியில்லையே என்று எண்ணி நான் அப்போது வேதனைப்பட்டேன். ஆனால்......

"மூடச் சமூக கட்டுப்பாட்டையே முறியடிக்க தைரியம் உள்ள எனக்கு, முள்ளும் வேலியும் எம்மாத்திரம்?" என்றுகேலியாக என் கன்னத்தை கிள்ளியபடியே சொன்னார், ராமர்.

இப்படிப்பட்ட ராமர் என்னை ஏமாற்றுவாரா? வேறு ஒரு பெண்ணை மணந்து என்னை வஞ்சித்துவிடுவாரா? காதலின் அடையாளமாக என் கைவிரலிலே கணையாளி மாட்டியவர் என்னைக் கைவிட்டுவிடுவாரா? என் பாட்டி மறந்துவிடு, மறந்துவிடு என்று சொல்லுகிறாளே—மறக்க முடியுமா?

என்னை எங்காவது, எவனுக்காவது கட்டிக்கொடுத்து கடனை தீர்த்துவிடலாம் என்று என் பாட்டி நினைக்கிறாள். அதற்கு நான்எப்படி உடன்படமுடியும்?

இரண்டொரு வரன்களையும் தேடிப்பிடித்தாள். நல்லவேளையாக என் சம்மதத்தையும் கேட்டாள். எப்படியோ வேண்டாம் என்று தட்டிக்கழித்துவிட்டேன்

ராமரைத்தவிர வேறு யாரையும் மணக்க முடியாது என்று ஓரேயடியாக சொல்லிவிட பல தடவை நினைப்பேன். ஆனால் ஏனோ முடிவதில்லை. எப்படி முடியும்? ராமர்வீட்டிலிருந்து பெண்கேட்க வந்து, என்பாட்டி முடியாது என்று சொன்னால், அப்போது வேண்டுமானால் நான் அவ்விதம் சொல்லமுடியும். இப்போது நான் சொல்லிப் பயன் என்ன?

"என்பேத்தி ஜானகி, உங்கள் ராமரை உயிராகக் காதலிக்கிறாளாம்! கல்யாணம் எப்போது வைத்துக்கொள்ளலாம்?" என்று ராமர் மாமாவிடம் ஏழைப்பாட்டியால் கேட்கமுடியுமா? கேட்டாலும், உனக்கும் உன் பேத்திக்கும் பைத்தியமாஎன்ற கேள்விதானே பரிசாகக் கிடைக்கும்? இந்த நிலையில் நான் என்காதலை எப்படி வெளியிட முடியும்? மறந்துவிடு என்று என் பாட்டி சொல்லும்போது மௌனந்தான் எனக்குத் துணையாக இருந்தது.

"ராமருக்கு அவர் மாமா பெண் பார்க்கிறாராம்" என்று என் பாட்டி சொல்லும்போது எனக்கு மௌனம் துணையாக இல்லை வேதனையும் கண்ணீரும் இணைபிரியாமல் துணை நின்றன.

ஆண்களின் சம்மதமில்லாமல் பெரும்பாலும் இந்தக் காலகல்யாணங்கள் நடப்பதில்லை. இதை நினைக்கும்போது ராமர் என்னை வஞ்சித்துவிட்டதாகவேபட்டது.

ஆனால்......

ராமர் மட்டும் காதல் பேசி காமசுகம் கண்டதும், வண்டைப்போல் பறந்து செல்லும் கயவர் இனத்தவராகஇருந்திருந்தால் .. என்னை அவர் கெடுத்திருக்க முடியும். என்கையைப்பிடித்து, விரலிலே கணையாழியை மாட்டியவர், காமுகராக இருந்திருந்தால் என்னைக்கட்டியணைத்திருக்கமுடியும். துடித்துக்கொண்டிருந்த என் உதடுகளிலே முத்தங்களை மாறி மாறிக் கொடுத்திருக்க முடியும். இதெல்லாம் செய்யாத—செய்ய நினைக்காத ராமர்என்னைமோசம்செய்வாரா?

கொழும்புக்குப் போக அவர் பிரியும்போது, அவர் கண்கள் கலங்கியிருந்ததைநான்கண்டேன் மறையும்வரை வைத்தவிழி எடுக்காமல் என்னை பார்த்துக்கொண்டே சென்றார். கொழும்பில் இருந்து வரும்போது நல்லசேலையும் துணியும் வாங்கிவருவதாகச் சொன்னார். இப்படிப்பட்டவர் என்னை மணக்காமல் வேறு பெண்ணை மணப்பாரா?

என் சம்மதமில்லாமலே என் பாட்டி எனக்கு வரன் தேடுவதைப்போல, ராமர் சம்மதம் இல்லாமல் அவர்மாமா பெண் பார்த்தாலும் பார்க்கலாம். அதற்கு

ராமர்பொருப்பாளியாகமுடியுமா இதெல்லாம் என் பாட்டிக்குத் தெரிய நியாயமில்லை. அதனால் தான் மறந்துவிடு என்று சுலப மாகச் சொல்லிவிட்டாள். என் பாட்டியை ஏமாற்ற "ராமரை மறந்துவிடுகிறேன்" என நானும் சுலபமாகச் சொல்லிவிடலாம்.

ஆனால்......

என் பாட்டி எனக்கு மேலும் மேலும் வரன் பார்க்காமலிருக்க வழிவகுப்பது எப்படி? பாட்டி எனக்கு வரன் பார்ப்பதையும், ராமர் மாமா பெண் பார்ப்பதை யும் ராமருக்கு அறிவிப்பது எப்படி?

இந்தியாவுக்கும் இலங்கைக் கும் எவ்வளவுதூரம் என்றாலும் —இடையே கடலும் காடும் மலையும் இருந்தாலும், விலாசம் மட்டும் தெரிந்தால் முக்காலணா கார்டில் முழு விபரத்தையும் இந்த விஞ்ஞான காலத்திலே அறிவித்துவிடலாம். ஆனால்...

ராமர் விலாசம் யாரிடத்திலே விசாரிப்பது? பருவப்பெண்ணா கிய நான், ஒரு வாலிபனின் விலாசத்தை யாரிடமாக இருந் தாலும் எப்படி கேட்கமுடியும்? நான் ஆணாகப் பிறந்திருந்தால் அரசகுமாரிகளின்விலாசங்களைக் கூடதெரிந்துகொண்டிருக்கலாம். ஒரு பெண்—அதிலும் பருவ மங்கை—பக்கத்துவீட்டு ஆண்டி யைப்பற்றிக்கூட அறிய முடியு மா? எனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. ஆனால்...

திடீரென்று தோட்டக்கார தாத்தா நினைவு எனக்குவந்தது. அவரிடம் தந்திரமாகக் கேட்ட றிய நினைத்தேன். அதற்குரிய நேரத்தை எதிர்பார்த்து ஏங்கி யிருந்தேன்.

அன்று என் பாட்டி இல்லாத சமயம் துணிச்சலோடு, ராமர் தோட்டத்திற்குச் சென்றேன். அங்கு தாத்தா ஏதோ வேலை செய்துகொண்டிருந்தார்; என் னைக் கண்டதும் "என்னம்மா! என்னசங்கதி?" என்றுகேட்டார்

"ஒன்றுமில்ல தாத்தா! இந்த வூட்டுக்காரர் கொளும்பில இருக் காராம்ல. அவரு விலாசம் வேணும்னு எங்க பாட்டி கேட் டா" என்று ஒரு பொய்யை மெய்போலச் சொன்னேன்.

"அவரு விலாசம் எனக்குத் தெரியாது. எஜமானையேபோயிக் கேளு" என்று தாத்தா சொல்லி விட்டு வேலையைப் பார்க்க ஆரம் பித்தார்.

எஜமானரைக் கேட்கும் அள வுக்கு அந்தஸ்து எனக்கு இருந் தால் தோட்டக்காரனை நான் கேட்பேனா? எந்த வகையில் திருடனைப்போலீஸ்காரர்களிடம் சிக்காமல் தப்பிக்கலாம் என்ப தற்கு ஆலோசனை சொல்லும்படி ஒரு சப்இன்ஸ்பெக்டரிடம் ஒரு திருடன் கேட்பானா? கேட்டால் அந்தத் திருடன் ஆபத்தின்றி திரும்ப முடியுமா? தாத்தாவி டம் மீண்டும் தாழ்மையாகப் பேசினேன்.

"தாத்தா! நாங்க போயி பெரியவரிடம் கேட்கமுடியுமா? நீங்க அவருகிட்ட ஒன்னும் கேட்க வேண்டாம். கணக்குப்பிள்ளை கிட்ட, எஜமானருக்கு தெரியாம கேட்டுச் சொல்லுங்க" என்று கெஞ்சலாகக் கேட்டேன்.

"அவரு விலாசம் உங்களுக்கு எதுக்கு?" என்று தாத்தா என்னைக் கேட்டுவிட்டார். எனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. திணறினேன்.

ஆனால்......

கொளுப்பு, குடைக்கு பெயர் பெற்ற இடம் என்று யாரோ சொல்லக் கேள்விப்பட்டிருந்தது எனக்கு நினைவுக்கு வந்தது. "பாட்டிக்கு ஏதோ ஒருசாமான் வாங்கணுமாம். அங்கே விலை குறைச்சலாக இருக்குமாம்!" என மழுப்பி பதில்சொன்னேன்.

இதற்குள் "ஏ முனியா" என்ற சப்தம் கேட்டது. தாத்தாவும் நானும் திரும்பிப் பார்த்தோம். ராமரின் மாமா தூரத்தில் நின்றபடி தாத்தாவைக் கூப்பிட்டுக் கொண்டு நின்றார். "நாளைக்கு வா குட்டி" என்று சொல்லி விட்டு, தாத்தா ஓடினார். நானும் பதறிப்போய் தலைதெறிக்க ஓடி வந்தேன். ஆனால்......

எனக்கு ஏனோ ஒருவித பயம் மனதிலே இருந்தது. தோட்டத்திலே என்னைக் கண்டதைப்பற்றி ராமர் மாமா என்னநினைத்திருப்பார்? தாத்தாவை ஏதேனும் கேட்டிருப்பாரா? தாத்தா உண்மையைச் சொல்லியிருந்தால்? இவள் ஏன் விலாசம் கேட்டாள் என்று ராமரின் மாமா எண்ணியிருந்தால்..? ஏதேனும் விபரீதம் வருமோ? இப்படிப் பலவாறாக என் மனம் குழம்பியது. அன்று பூராவும் தூக்கமில்லை.

மறுநாள் காலை எப்படியோ விடிந்தது. தாத்தாவை சந்திக்க திட்டம் போட்டுக்கொண்டிருந்தேன். அடிக்கடி தோட்டத்தை எட்டிப் பார்த்தேன். தாத்தா இருக்கிறாரா, தனியாக இருக்கிறாரா என்று பலதடவை பார்த்தேன், காணவேயில்லை.

காலை 10 மணிக்கு வெளியில் போய்வந்த என் பாட்டி, "உன்னைப் பெண் பார்க்க இன்னும் கொஞ்சநேரத்தில் மேலத்தெருவிலிருந்து வருகிறார்கள். நல்ல சேலையுடுத்திசீவிக்கொள்" என்று சொல்லி, வாங்கிவந்தமல்லிகைப் பூவை என் கையிலே கொடுத்தாள் பாட்டி.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அழவேண்டும்போல் இருந்தது. ஆனால் என்பாட்டி பக்கத்திலே இருந்து என்னை அவசரப்படுத்தினாள். வேறுவழியின்றி, என்னை நானே சிங்காரித்தேன். என்னைப்பார்க்க மூன்று பெண்கள் வந்தார்கள். சந்தையிலே ஆடுமாடு வாங்க வருபவர்கள், பல்பார்ப்பதுபோல சுண்டு விரலில் இருந்து, சுருள் மயிர் வரை திருப்பித் திருப்பி

என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "மூக்கும் முழியும் நல்லாத்தான் இருக்கு. எங்களுக்கு பிடிச்சிருக்கு என் தம்பிக்குத்தான் பிடிக்கணும்" என்று சொல்லிவிட்டு, சீர்வரிசைபற்றி என்பாட்டியிடம்பேச்சுக்கொடுத்தார்கள், வந்தவர்கள், வாயிலே வெற்றிலையைப் போட்டபடி.

இவர்கள் வெளியே புறப்படும் போது, என்பாட்டியும் கூடவே பேசியபடி புறப்பட்டாள். பயங்கரமான வாழ்க்கையை நோக்கி நான் முன்னேறிக்கொண்டிருப்பதாகவே எனக்குப்பட்டது.

இன்னொருவனுக்கு என்னைக் கட்டிக்கொடுக்க பாட்டி முயற்சிக்கிறாள். இன்னொருத்திக்கு ராமரை கட்டிவிட அவர் மாமா முயற்சிக்கிறார். இதற்கிடையிலே நான் சிக்கி வேதனைப்பட்டேன். ராமரின்விலாசம் கிடைக்காவிட்டால், விஷயம் எப்படி எப்படி முடியுமோ என்பதை எண்ணிப் பார்க்கவே பயமாக இருந்தது.

தோட்டத்திற்கு ஓடினேன். நல்லகாலத்திற்கு தாத்தா தயாராக நின்றார். நான் சென்றதும் "இந்தா ராமர் எசமான் விலாசம்" என்றுசொல்லி ஒருதாளை கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு ஓடோடி வந்தேன். பக்கத்து வீட்டுப் பையனை அழைத்து தந்திரமாக ஒருதபால் கவர் வாங்கிவரச் சொன்னேன்.

அவன் சென்றதும் ராமருக்கு ஒரு கடிதம் எழுத உட்கார்ந்தேன். கடிதத்தை எப்படி ஆரம்பிப்பது? "காதலரே" என்று ஆரம்பிப்பதா? சுந்தரா, இந்திரா என்று ஆரம்பிப்பதா? எனக்கு ஒன்றுமேபுரியவில்லை. கொஞ்சநேரம்யோசித்தபடி இருந்தேன்

ஆனால்......

முட்டாள்தனமான யோசனையில் மூழ்கி கடிதம் எழுதாமல் இருப்பதா என்ற எண்ணம் அடுத்தவினாடிஏற்பட்டது. வீடு தீப்பற்றி எரியும்போது, உதவிக்கு ஆட்களை அழைக்க, அகராதியைப் புரட்டி வார்த்தைகளைத் தேடுவதா? வார்த்தைகள்கிடைக்கும்வரைக்கும் பற்றிஎரியட்டுமே என்று பார்த்துக்கொண்டு இருப்பதா?

"காதலரே!" என்று ஆரம்பித்து இங்குள்ள நிலையை விளக்கமாக எழுதினேன். என் கடிதத்திலே கவிதாநயம் இல்லாமல் இருக்கலாம்; இலக்கியச் சுவை இல்லாதிருக்கலாம்; இலக்கணப் பிழை, எழுத்துப்பிழை இருக்கலாம். அதற்காக நான் கவலைப் படவில்லை. கவித்துவம், இலக்கியம், இலக்கணம் ஆகியவை படித்த கூட்டம் ரசிப்பதற்குத்தான் பயன்படும். என் கடிதம் இந்தக் கூட்டத்தினர் ரசிப்பதற்காக எழுதப்பட்டதா? இல்லவே இல்லை. அபாயநிலையை அறிவித்து உடனே புறப்பட்டு வாருங்கள் என்று என் அன்பருக்கு நான் அடித்த அவசரத் தந்தி போன்றதுதான் என் கடிதம்.

தந்தியிலே கவிதாநயம் இல்லையே, இலக்கணம் சரியில்லையே என்று யாராவது கவலைப்படுவார்களா?

நான் கடிதம் எழுதி முடித்ததும், பையன் கவர் வாங்கிவந்து விட்டான். அவர் விலாசத்தை எழுதி, என் விலாசத்தையும் ஓரத்தில் எழுதி, அந்தப் பைய னிடமே கவரைக் கொடுத்து தபால்பெட்டியிலே போட்டுவிட அனுப்பினேன். அவனும் ஓடி னான்; கொஞ்ச நேரத்தில் போட்டுவிட்டதாகச் செய்தியும் அறிவித்தான்; அப்போதுதான் என் மனதில் இருந்து ஏதோ ஒரு பெரும் பாரம் இறங்கியது போல் இருந்தது.

என்பாட்டி வெகுநேரம்கழித்து வந்தாள். மிகவும் சோர்ந்து காணப்பட்டாள். "பாட்டி சாப்பிடலாமா?" என்று கேட்டேன். "நீ சாப்பிடு எனக்குப் பசியில்லை" என்று என் பாட்டி கவலையோடு கூறினாள். "என்னபாட்டி ஒரு மாதிரியாய் இருக்கே?" என்று கேட்டேன்.

"இன்று காலையில் வந்த வரனும் உனக்கு அமையவில்லை!" என்று அழாக்குறையாகச் சொன்னாள் பாட்டி. ஆனால் எனக்கு ஒரே ஆனந்தமாக இருந்தது. அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் "ஏன் பாட்டி?" என்று கேட்டேன். "அவன் கேட்கிற சீர்வரிசையை யாரால் செய்ய முடியும்? இனி வேற வரன் பார்க்கவேண்டியதுதான்" என்று சொல்லியபடி என்னைப் பார்த்தாள் பாட்டி.

பாட்டி வேற வரன் என்றவுடன், எனக்குத் திகிலாய் இருந்ததோடு, கவலையும் என்னைச் சூழ்ந்தது. கண்ணிலே நீரும் பெருகியது. இதைக்கண்ட பாட்டி "நீ ஒன்றுக்கும் கவலைப் படாதம்மா! உன் அழகுக்கு எத்தனையோ வரன் கிடைக்கும். சீக்கிரமா நான் முடிச்சி வைக்கிறேன் வா சாப்பிடலாம்" என்று சொல்லி என்னை அழைத்தாள்.

ராமர் வரும்வரைக்கும் எனக்கு வரன் கிடைக்காமல் இருக்க வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்தேன். (தொடரும்)

வானொலியில் இயங்கும் கடிகாரம்!

வானொலிஅலைகளால் இயக்கப்பட்டு சரியான மணி காட்டும் முதல் கடிகாரம் இப்பொழுது லண்டன் கோல்ட்ஸ்மித் ஹாலிலுள்ள ஹோராலாஜிகல் இன்ஸ்டிடியூட்டில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாம். இதை நிர்மாணித்தவர் 70 வயதுடைய ஓர் அபிவிருத்தி என்ஜினீயர். ரக்பி கம்பியில்லாத் தந்தி நிலையத்திலிருந்து ஒவ்வொரு விநாடியும் பரப்பப்படும் அலைகளால் இக்கடிகாரம் இயக்குவிக்கப்படுகிறதாம்.

ஒரு விநாடியின் ஆயிரத்தில் ஒருபங்கு அளவிலும் இக்கடிகாரம் சரியானமணிகாட்டுகிறதாம். இக்கடிகாரங்கள் வெகு சீக்கிரத்தில் ரயில்வே, தபாலாபீஸ், தொழிற்சாலைகளில் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது

தெரிந்த முத்துக்கள்

புத்திசாலிகள் காரணங்களால் குறிப்புணர்கின்றனர்; சாதாரண மானவர்களுக்கு அனுபவம் ஆதாரம்; முட்டாள்கள்தேவைக்கு அடக்கம்; அனைத்திற்கும் கீழானவர்கட்கு இயற்கையே துணை!

—சிசெரோ

குறிப்பாக தன் பணம் எங்கெல்லாம் போகிறதென்பதை அறியாதவன் நிச்சயமாகத் திருமணம் ஆகாதவனாகத்தான் இருப்பான்.

—டன்பென்னெட்

இன்றைய உலகத்திலே இரண்டு வகையான பேர்கள்தாம் சுகமாக வாழமுடியும்—ஏமாற்றுவித்தை தெரிந்தவனும், துறவியும்தான்.

—காண்டேகர்

நாகரிகம் அடியோடுமடியும்நாள் தான் மனித இனத்தின் முடிவு நாளாகும். —எமர்சன்

ஆர். என். பாஸ்கரன், மதுரை.

* * * *

இயேசு எதைச் சொன்னதற்காக கொல்லப்பட்டாரோ அது இன்று வேதமாய், வணக்கத்திற்குரியதாய் விளங்குகிறது. எனவே இன்று வெறுக்கப்படுவதெல்லாம் கெட்டது என்று சொல்லிவிட முடியாது.

—பெரியார்

மத அறிவு மக்களைப் பாகுபடுத்தவும் பிற மதத்தினரிடம் வெறுப்புக் காட்டவும் கற்பிக்கிறது. இந்த வெறுப்புக் காட்டுவதும் கடவுள் பெயரால் நடைபெறுகிறது.

—தாகூர்

துன்பத்திலிருந்து உண்மையும், கடைத்தேறுவதிலிருந்து நன்றியும், துக்கத்திலிருந்து சுகமும், விடுதலையிலிருந்துநம்பிக்கையும்பிறக்கிறது.

—ரஸ்கின்

உன்னுடைய அன்பை ஒரு புரோகிதன் மூலமாக உன் மனைவிக்குச் செலுத்தமுடியுமானால், உன்னால் அன்பை ஒரு புரோகிதன் மூலம் கடவுளுக்குச் செலுத்தமுடியும்.

—H. G. வெல்ஸ்

எந்த மக்கள் சமூக சீர்திருத்தமில்லாமல் அரசியல் சுதந்திர இயக்கம்நடத்துகின்றார்களோ அவர்கள் தேசத்தை நடத்தத் தகுதியற்றவர்கள் என்பது என் எண்ணம்.

—லாலா லஜபதி

கடவுளின்றி மனிதன் வாழமுடியுமா? என்பதைவிட முக்கியம் வாய்ந்தது மனிதன் இன்றிக் கடவுள் இருக்கமுடியுமா? என்பதே.

—லேண்டர்

சாமிநரசிம்மன், எரிசினம்பட்டி.

* * * *

உலகமே என்னுடைய இல்லம்; மனித சமுதாயமே என்னுடைய தோழன்; பிறர்க்கு நன்மை செய்வதே என்னுடைய மதம்; என் மனமே என்னுடைய கோவில்.

—தாமஸ்பெயின்

அழகு! அதுசிலநாளில் சிதைந்துவிடும் ஒரு சாம்ராஜ்யம்.

—சாக்ரடீஸ்

எனக்கு மிகவும் பிடித்தமான பொருள் புத்தகம்! புத்தகத்திற்

காகப் பணஞ் செலவழிப்பதில் நான் ஊதாரி என்ற பட்டத்தைப் பெறவும் தயார்.

—ஜவஹர்லால்நேரு

வாழ்க்கைஎன்பது மலர்; அன்பு அதன் தேன். —விக்டர்ஹ்யூகோ

விஞ்ஞானம் ஒளியைத் தருகிறது. மூட நம்பிக்கை இருளைத் தருகிறது.

—இங்கர்சால்

குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம். —பாரதிதாசன்

கட்டுப்பாடான உணர்ச்சியே முன்னேற்றத்தின் ஜீவநாடி.

—காந்தி

அறிவு ஒரு தொடர்கதை. அதற்கு ஆசிரியர்கள் தொடர்ந்து தோன்றியபடி இருக்கிருர்கள்.

—அண்ணாத்துரை

ந. கந்தசாமி, விருதை.

* * * *

அன்பு, அன்பு; அந்த ஒரேவஸ்துவே உனது ஆத்ம பொக்கிஷம்,

—விவேகானந்தர்

எதிர்ப்பு எங்குஇல்லையோ அங்கு வெற்றி இல்லை. —பெர்னுட்ஷா

தந்திரத்தைத் துரத்தவேண்டுமானுல் தற்குறித்தனத்தைத் தொலைத்தாக வேண்டும். —C. N. A.

அ. பிச்சை, மதுரை.

* * * *

நீ பிறரைவிட அதிக புத்திசாலியாக இருக்க முடியுமானுல் இரு. ஆனுல் அவர்களிடம் நீ அவ்வாறு இருப்பதாகமட்டும் சொல்லாதே.

—செஸ்டர்பீல்ட்

உருட்டும் கண், மிரட்டும் சொல் ஒருகாலத்திலே ஆதிக்கக்கருவிகள்

—அண்ணு

சிந்தனை என்ற வயலுக்கு ஆராய்ச்சி என்ற நீர் பாய்ச்சி மூடமதி என்ற களை முற்றிலும் அகற்ற விவேகம் என்ற விளைவு ஏற்படும்.

—கருணாநிதி

நீ ஒரு கற்றறிந்த சிறந்த பேச்சாளனுக இல்லாவிடினும் கூர்ந்து கேட்பவனுக இரு. —அலிரலி

யூ. அ. ராஜா, ஆவூர்.

* * * *

கடவுள் உண்டா? இல்லையா? அதுபற்றிக் கவலை இல்லை. அருள் தோன்றுமிடமொன்று இருக்க வேண்டுமல்லவா? அது உயிரிலிருந்துதானே தோன்ற வேண்டும்! அதனைத்தான் கடவுள்என நாங்கள் அழைக்கிருேம்.

—மறைமலையடிகள்

மத விஷயங்களை முன் நிறுத்தி கடவுள் நம்மை பரிசீலனை செய்ய மாட்டான். நமது செயல்களைமுன் நிறுத்தியே நம்மைப்பரிசீலனைசெய்வான்என்று நம்பக்கூடியவன் இந்த உலகத்தில் ஒருவனுவது உண்டா?

—வால்டையர்

கடவுள் மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவேண்டி, அறிவாளிகளால், காட்டுமிராண்டிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒருசாதனம்.

—பெரியார் ஈ. வே. ரா.

கடவுள் மனிதனுடைய மானசீக புத்திரன்.

—ராகுல சாங்கிருத்தியாயன்

இல்லையென்பார்கள் சிலர்; உண்டென்று சிலர் சொல்வார். எனக்கில்லை கடவுள் கவலை.

—பாரதிதாசன்

D. A. சந்தானம், கோவை.

★

சீர்திருத்தவாதி

[மகிழ்ச்சி சதானந்தம்]

"அன்பரே, வணக்கம்.

இவ்வளவு நடந்த பின்னும், தங்களை 'அன்பரே' என்றுதான் அழைக்கத் தூண்டுகிறதே தவிர அயோக்கியன் என்றுகூற மறுக்கிறது இப்பேதையுள்ளம். காரணம் தப்பு இருவர் பேரிலும் இருக்க, தங்களை மட்டும் எங்ஙனம் தவறு இழைத்தவராக அழைக்கமுடியும்? இருந்தாலும் தாங்கள் ஆடவர், திடசித்தத்துடன் நடந்துகொண்டிருந்தால் இந்நிலை, எனக்கு ஏற்பட்டிருக்காது என்றே கருதுகிறேன்.

'பெண்கள் இளகிய சித்தம் படைத்தவர்கள். எளிதில் மனதைப் பறிகொடுத்து இலகுவில் ஏமாறும் தன்மையுடையவர்கள்.' இப்படிப் பலபுத்தகங்களில்படித்திருந்தேன். படித்ததோடுமட்டுமல்ல அதேபோல் நடந்த பல சம்பவங்களைக் கேள்விப்பட்டுமிருந்தேன். ஏன் எங்கள் ஆச்சிரமத்திலேயே சிலருக்கு நேர்ந்ததையும்கண்கூடாகக்கண்டேன். நமக்கும் அவ்வித நிலை வந்துவிடக்கூடாதுஎன்று எவ்வளவோ கட்டுப்படுத்தி கண்ணும் கருத்துமாக இருந்தும் வலிவிழந்து வழுக்கிவிழுந்துவிட்டேன், உங்கள் பாசவலையில்.

பட்சிகளை மறைந்திருந்து வேட்டையாடுவதையே தொழிலாகக்கொண்டவேடுவரின் அம்புபட்டபின் புறு விழாமல் பறந்து செல்லவா முடியும்?

சந்தர்ப்பவசத்தால்வேடுவனைக் கண்டுவிட்டால், ஒருகணம்கூட தாமதம் செய்யாது பறந்துவிடுகின்றன அனுபவப்பட்ட பட்சியினங்கள். ஆனால் பகுத்தறிவு படைத்த எங்கள் பெண் இனத்தில் தீமை—இழிவு - துன்பம்—துயர்—ஒழுங்கீனம் என்பதை நன்கு தெரிந்திருந்தும்—இதற்குமுன் இம்சைக்குள்ளானவர் எண்ணற்றபேரின் நிகழ்ந்த சம்பவங்கள் தெரிந்திருந்தும்—தங்களைக் காப்பாற்றிக்கொள்ளாது, விளக்கில்வீழ்ந்து மடியும் விட்டில்கள் போல் பலர் மேலும்மேலும் தவறான பாதையில் வீழ்ந்துகொண்டே இருக்கிறார்களே! இவ்வளவு கூறும் நானும் கூட வீழ்ந்துவிட்டேனே!

இதை எண்ணும்போது என் மனம் இப்பொழுது என்னபாடு படுகிறதுதெரியுமா? 'விளக்கைப்

பிடித்துக்கொண்டு கிணற்றில் வீழ்ந்தாற்போல்' என்று கூறுவார்களே, அது என்வரை மிக மிக உண்மையாகிவிட்டது. சந்தர்ப்பங்கள் என்ற கண்களும், சூழ்நிலைஎன்ற மனமும், பெண்களின் எண்ணத்தை மழுக்கிவிடுகின்றன. இப்படித்தான் என் சொந்த அனுபவத்திலிருந்து கூறத் தோன்றுகிறது.

எத்தனை எத்தனைபேர் என்னை வலையமிட்டுத் திரிந்தார்கள் அன்று. கற்சிலைக்குச் சேலை கட்டிவிட்டிருந்தால்கூட காரிகை என்று கட்டிப்பிடித்துத் தழுவ நிற்கும் காமுகன்முதல், கால் சட்டை, கைச்சட்டை போட்டு டிப்டாப்பாக சினிமா பாணியில் சரசமாட வந்தவர்கள் ஈராக எத்தனைரகங்கள்? இந்தப் பகல் வேடதாரிகளின் பகட்டில்மயங்கி மானமிழந்த மாதுசிரோன்மணிகள் பலர் இன்றும் பத்தினிகள் போல் எங்கள் ஆச்சிரமத்தில் உலாவிக்கொண்டுதான் இருக்கிறார்கள். சிலர் இத்தொழிலில் கைதேர்ந்தவர்களாகவும் ஆகிவிட்டார்கள். தங்களை சக்கைஎன்று உதறிய வாலிபர்களுக்கு, சாறுள்ள கரும்பை, சரிக்கட்டிக் கொடுப்பதில் முனைந்துள்ள சாமர்த்தியக்காரிகளும் உண்டு.

எங்கள் **சாந்திஆச்சிரமம்** ஆரம்பித்த நாளில் அதற்கிருந்த செல்வாக்கே தனி. அனாதரவாக விடப்பட்ட பெண்கள், ஆதரிப்பாரற்றுத் தவித்த அணங்குகள், பொருளாதார நெருக்கடியால் குடும்பத்தின் கஷ்ட நிலையில் பெற்றோர்களாலேயே கொண்டு வந்து சேர்க்கப்பட்ட கன்னிகள், இப்படி பலதரப்பட்ட பாவையரின் பஞ்சாமிர்தமாக—அவர்களை முன்னணிக்குக் கொண்டு வந்து நாட்டின் சமூக சேவகிகளாக, 'தன்கையே தனக்குதவி' என்பதற்கேற்பதொழிற்கல்விகள் போதிக்கப்பட்டும், நர்ஸ் வேலைக்குப் பழக்கியும், நூல் நூற்று, தறி ஏற்றி ஆடைசெய்து மற்றையோருக்கு மானம் காக்க உதவியும் இப்படிப்பட்ட உயர்ந்த காரியங்களில்—நற்செயல்களில் ஈடுபட்டு வந்தது ஆச்சிரமம்.

பொதுமக்கள் மிகப் பெருமையாகப் பாராட்டிவந்தார்கள் ஆச்சிரமதலைவியை. அப்பாதையில் பிரயாணம்செய்யும்மந்திரிகளும், சர்க்காரின் உயர்ந்த வேலையிலிருக்கும் அதிகாரிகளும் இன்றும் கூட எங்கள் ஆச்சிரமத்திற்கு வராமல் போவதில்லை. இருந்தும் இப்பொழுது பொதுமக்களின், குறிப்பாக அருகிலுள்ள நகரங்களின் மக்கள்மனதிலிருந்து அகன்றுகொண்டே இருக்கிறது. அகல்வது மட்டுமல்ல, கேவலமான பெயரும் பெற்றுக் கொண்டிருக்கிறது என்போன்ற சில படுக்காளிப் பெண்களால். ஆம்! சிந்திக்கவேண்டாம், என்னையும் சேர்த்துத்தான் கூறுகிறேன். உயர்ந்த நோக்குடன் தொடங்கப்பெற்ற ஸ்தாபனத்

திற்கு, எங்கள் போன்ற—அதே நேரம் உங்கள்போன்று காரிகைகளை கன்னமிட்டுத்திரியும் ஊதாரிகளால்—இழிசொல்லுக்கு இடமேற்பட்டுவிட்டது.

எங்கள் ஆச்சிரமத்திலுள்ள அனேக பெண்களுக்கு பந்துக்களே கிடையாது. ஏன்! எனக்கும்கூடத்தான்! இருந்தும் எங்களது அழகும், நடை, யுடை பாவனையும், கன்னிப் பருவமும், கட்டழகும் எண்ணற்றசொந்தம் பாராட்டி வரும் ஆடவரைச்சிருஷ்டித்துவிடுகின்றன.

கஞ்சிக்குவழியில்லாதநிலையில், தஞ்சம்புகுந்தஇடத்தில் கையில் தாராளமாககாசுவைத்துச்செலவு செய்ய பணத்திற்கு எங்கே போவது?

இந்தப் பலவீன நிலைமைகளை அறிந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், இப்படிப்பட்ட பெண்களின் கருத்தைக் கவர, விதவிதமான ரிப்பன்களையும்,பௌண்டன்களையும், பௌடர்களையும், சாரிகளையும், ஜாக்கெட்களையும், ரொக்கமாக ரூபாய் நோட்டுகளையும் அவரவர்கள் சக்திக்கு ஏற்ப கொண்டுவந்து, பிளாக்மார்கெட் மனதுடன் சாகஸங்களால் மனதைமாற்றிஉறவினர்களாகி, பின் தாராளமாக—நேரடியாக வந்து கண்டு, பேசி களியாட்டங்கள் புரியும் லைசென்ஸ் பெற்றவர்களாகிவிடுகிறார்கள் முதலில் 'சிஸ்டர்' என்று கூறிவந்தவர்கள்.

வாரத்தில்ஒருமுறையோ, பலமுறையோ அருகிலுள்ள நகரங்களுக்கும் திடீர் உறவினர்களால் அழைத்துச்செல்லப்பட்டு, சினிமா, நாடகங்கள் கண்டுகளிப்பதிலும், சிங்காரலீலைகள் புரிவதிலுமாக பயன்படுத்தப்படுகிறார்கள்.

முதலில் 'சிஸ்டர்' என்றுகூறி 'பிரதராக' வந்த நபர், நாளடைவில் 'மாமா'வாக மாறி, பாண்டவர் தர்ம பத்தினி 'பாஞ்சாலி'யாக அவளை மாற்றி, 'ஓரே அம்பில் இரண்டுபுறா' என்றபடி தானும் சம்பாதிப்பதுடன், அவளுக்கும் பணம் கிடைக்க வழி செய்கிறார்கள்.

கொழுகொம்பின்றி காற்றில் அலைந்தாடிக்கொண்டு இருக்கும் கொடி, வண்டிச் சக்கரம் நின்றாலும் பற்றிக்கொள்ளத்தான் செய்யும். ஆனால் ஒருசில நாளில் அந்த வண்டிச் சக்கரம் சுழல வேண்டியசமயம் வரும்பொழுது

3 வகை மனிதர்கள்

இந்தஉலகத்தில் 3 வகை மனிதர்கள் உள்ளனர். பிறரின் அனுபவத்திலிருந்துகற்றுக்கொள்ளும் மக்கள்ஒருவகையினர். இவர்கள் புத்திசாலிகள். மற்றொரு வகையினர் தங்கள் அனுபவத்திலிருந்தேதெரிந்துகொள்பவர்கள் இவர்கள் மனிதர்கள். தங்கள்சொந்த அனுபவத்திலிருந்தோ அல்லது பிறரின் அனுபவத்திலிருந்தோ நன்மையை உணர்ந்துகொள்ள முடியாதவர்கள் 3வது வகையினர். இவர்கள் முட்டாள்கள்.

—நேரு

பற்றிய கொடியைஅத்துக்கொண்டுதான் செல்ல நேரிடுமேதவிர, ஆதரவு காட்டப்படுவதில்லை அநேகமாக. பின் வேறு ஏதாவது பற்றி ஏற கிடைக்குமா என்று அலைந்தாட வேண்டியது தான் மீண்டும். இப்படித்தான் அனாதரவாய் விடப்பட்ட பெண்களின் நிலையும் ஆகிவிடுகிறது.

இவ்வளவும் ஏன்? என்வாழ்வுப் பாதைக்கு வாருங்களேன்! ஆச்சிரமத்துத்தலைவிக்கு அத்யந்த பிள்ளைகளில் நானும் ஒருவள். என்னுடைய சொல்லும் செயலும் அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அன்று ஒருநாள் முதன்முறையாக தாங்களும் தங்கள் தாயாரும் ஆச்சிரமத்தைக் காண வந்திருந்தீர்கள். 'கார்டிரைவர் லீவில் சென்றிருந்ததால் தங்களையே ஓட்டிக்கொண்டு வரும்படி அழைத்துவந்ததாகவும் கூறினார்கள் உங்கள் தாயார்.

தலைவிக்குக் கொஞ்சம் அவசர வேலைகள் இருந்தபடியால், ஆச்சிரமத்தின் ஆக்கவேலைகளை நேரில் கூட்டிச் சென்று காண்பித்து வரும்படி என்னை அனுப்பினார்கள். நானும், உங்களுடன் வந்திருந்த உங்கள்சகோதரி மூன்று வயது பாலகியை அன்போடு வாரிஎடுத்து கையில் தாங்கிய வாறு சுற்றிக் காண்பித்துக் கொண்டே வந்தேன்.

இடை இடையே நீங்கள் சில வேலைகள் குறித்தும், ஆச்சிரம காரியங்கள்குறித்தும் கேள்விகள் கேட்டுக்கொண்டே வந்தீர்கள் நினைவிருக்கிறதா? அப்பொழுது உங்கள் தாயார் "இவன் ஒரு பெரிய சீர்திருத்தவாதியம்மா! மேடைப்பிரசங்கத்திற்கெல்லாம் போவான். இப்படித்தான் எதையும் நோண்டி நோண்டிக் கேட்பான்" என்று கூறினார்கள்.

இதைக்கேட்டபொழுது, அதுவும் 'சீர்திருத்தவாதி' என்று காதில் விழுந்தபோது ஏதோ ஒருவித—இன்னது என்று கூற முடியாத—மனத் தடங்கல் ஏற்பட்டது. என்னை அறியாமலே அடிக்கடி அதன்பின் உங்களை கடைக்கண்ணால் நோக்கினேன். ஏன்! அதே நேரம் நீங்களும் தான் பார்த்தீர்கள். என்னைவிட ஒருபடி அதிகமாகவே உங்கள் கண்கள் உருண்டன.

"எங்கே அவளைக்கொடுங்கள். கை நோகப்போகிறது" என்று கூறிக்கொண்டே என்னிடமிருந்து வாங்கவந்தீர்கள் உங்கள்சகோதரியை. ஆனால்அவள் என் கழுத்தைச் சுற்றிக்கொண்டு "அக்காவிடம்தான் இருப்பேன்" என்று முரண்செய்ததை பலவந்தமாக இழுக்க நீங்கள்முற்பட்டபோது உங்கள் கை என்மேல் உராய்ந்ததில் ஏற்பட்ட உணர்வு என் புத்தியை பேதலிக்கசெய்துவிட்டது 'சீர்திருத்தவாதி'என்ற எண்ணத்தால் பலதரப்பட்டு சிந்தனைக்கு உள்ளாகி இருந்த என்மனம்.

மலர்த் தோட்டத்து சிமிண்ட் பெஞ்சில் சிறிதுநேரம் அமர்ந்திருந்தோம். அப்பொழுது உங்கள் தாயார் என்னுடன் உரையாடி, என் சொந்தக் குறிப்புப் பற்றியும், மற்ற பிள்ளைகள்பற்றியும் வினவினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட என்போன்ற பெண்கள் இருக்கிறார்கள் என் பதை அறிந்தபோது, நீங்களும்சேர்ந்து வியந்தீர்கள்.

அப்பொழுதுகுழந்தைக்குமலர் பறித்து தலையில் சூட்டியும், சட்டையில் சொறுகியும் அளவளாவினேன். அந்தச்சிறிதுநேரத்திற்குள் குழந்தை 'மல்லிகா' மனதைப் பூராவும் என்னிடம் பறிகொடுத்துவிட்டது

உங்கள் தாயார் தலைவியிடம் ஆச்சிரம நிதிக்காக ஐம்பது ரூபாய் கொடுத்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு வீடுதிரும்ப முற்பட்டபோது குழந்தை என்னைவிட்டு வரமாட்டேன் என்று பிடிவாதமாக அழ ஆரம்பித்து விட்டது. எவ்வித ஏமாற்றிற்கும் மசியவில்லை. இறுதியாக உங்கள் தாயார் "மனோன்மணியை உடன்காரில் அனுப்புங்கள். வீடு சேர்வதற்குள் குழந்தை தூங்கிவிடும் உடனே காரில் திரும்ப அனுப்பிவைத்து விடுகிறேன்" என்று தலைவியிடம் வேண்டினார்கள்.

ஏனோ அப்பொழுது ஓரக் கண்ணால் உங்களைக் காணத் தூண்டியது என்மனம். 'செம்படவனுக்கு மிதப்புமீது கண்' என்றபடி நீங்களும் அதேநேரம் என்னைக் கவனித்தீர்கள்.

தலைவியும் விடைகொடுத்தார்கள். "நானெல்லாம் தூங்கமாட்டேன் முழித்துக்கொண்டேதானிருப்பேன். அக்கா என்கூடத்தான் இருக்கவேண்டும்" என்று பிஞ்சுக்குழந்தை பிதற்றியது.

கார் புறப்பட்டது. காற்று ஜில் என்று வீசிக்கொண்டிருந்தது. என்மனம் எங்கோ அலைந்து ஆடிக்கொண்டிருந்தது.

"ஏன் தம்பி இவ்வளவு வேகமாக ஓட்டுகிறாய்? சற்று மெதுவாக ஓட்டு" என்ற உங்கள் தாயாரின் குரல் கேட்டுத்தான் என் சிந்தனை கலைந்தது. அதே நேரம் தாங்களும் வேகத்தைக் குறைத்தீர்கள் உங்கள் சிந்தனையும் எங்கோ சிறகடித்துக்கொண்டிருந்திருக்கவேண்டும்கார்வேகத்

துடன் போட்டியிட்டு, என்று நான் எண்ணியதை, பின்னல் என்னிடம் ஒப்புக்கொண்டீர்கள்.

வீட்டை அடைந்ததும் நானே தான் தூங்கிக்கொண்டு இருந்த குழந்தையை நேராக மெத்தையில்கொண்டுவந்து கிடத்தினேன் உங்கள் அரண்மனை போன்ற வீட்டையும், ஓடுகளால் ஆன எங்கள் ஆச்சிரம குடிசையையும் ஒப்பிட்டு உங்களுக்கும், எனக்கு முள்ளபேதத்தை வெட்டவெளிச் சமாக்கியது என்மனம்.

தங்கள் தாயாரிடம் திரும்ப ஆச்சிரமம் செல்ல வேண்டியது குறித்துக்கூறினேன். அவர்கள் கட்டாயம் சாப்பிட்டுவிட்டுத் தான் செல்ல வேண்டுமென்று அன்புக் கட்டளை இட்டார்கள். தட்ட முடியாது ஒப்புக்கொண்டேன். எனக்கு உபசரணை செய்வதில் நீங்கள் எடுத்துக் கொண்ட ஆர்வம்! அட்டா! இன்று நினைத்தால்கூட.....

ஆச்சிரமத்தைநோக்கி திரும்ப கார் புறப்பட்டது. இப்பொழுதும் நீங்கள் தான் டிரைவர். ஆனல் நாம் இருவர்தான் பிரயாணிகள். என் மனம் 'திடுக், திடுக்கென்று' அடித்துக்கொண்டே வந்தது. ஊர்எல்லை முடியு மட்டும் மௌனம் குடிகொண்டிருந்ததை, சாலேரோடு வந்தவுடன் தாங்கள்தான் முதலில் கலைத்தீர்கள்.

"உங்கள் பெயர்......"

"மனேன்மணி" நடுங்கிக் கொண்டே கூறினேன்.

"ஓ மறந்துவிட்டேன்...தென்னுட்டு மூவேந்தர்களின் சரித்திரச் சம்பவம் சார்ந்து நிலைபெற்ற அருமையான பெயர்"

மறப்பதாவது! பேச்சுஇழுப்பதற்காகக்கேட்கப்பட்ட கேள்வி என்று நான் புரிந்துகொள்ளாமலில்லை. அப்படியே பேச்சு வளர்ந்துகொண்டே வந்தது. எதை எதையோ பேசினேம். அவை இப்பொழுது சரியாக நினைவிலில்லை. ஆச்சிரமமுமடைந்தோம். தலைவியிடம் என்னை ஒப்படைத்துவிட்டுத் திரும்பி விட்டீர்கள்.

அன்று இரவு பூராவும் எனக்குத் தூக்கமில்லை. மறக்கமுயன்றும் முடியாதபடி மாறி மாறி தங்கள் ஞாபகமே வந்துகொண்டிருந்தது.

குழந்தை மல்லிகாவின் சாக்கால் அடிக்கடி காரில் இங்குவந்து புழங்க ஆரம்பித்தீர்கள். குழந்தையைத் திரும்பக்கொண்டு வந்துவிடும சந்தர்ப்பங்களால் நம் இருவரிடையே தொடர்பு நெருக்கமாகியது. காற்றுட வைத்த ஐஸ்கட்டி, கரையாமல் அப்படியே இருக்குமா?

இரு இளம் உள்ளங்கள்—இளமையின் முதற்படியில்நின்ற நான், அதேபோல் வாலிபத்தின் தலைவாயிலில் நின்ற தாங்கள்—தனிமையில் விடப்பட்டால்......

எத்தனை நாட்களுக்கு பேச்சளவில் திரிய முடியும்?

"நான் சீர்திருத்தவாதி. கல்யாணம் என்பது என் சொந்த நலனைக் குறித்தது. இதில் என் தாய்தந்தையர் தலையீட்டை விரும்பவில்லை. உன்னையன்றி வேறொரு பெண்ணை மனத்தாலும் தீண்டுவதில்லை" என்று திருநீலகண்டர் மாதிரி நீங்கள் ஆணையிட்டுக் கூறியதை நம்பி நழுவி விழுந்துவிட்டேன் வாழ்க்கையில்.

அன்றுவரை காணாத இன்பத்தை அடைந்ததின் பலனாக அதை மீண்டும் மறப்பதென்பது முடியாததாகிவிட்டது. அதுமுதல் அடிக்கடி உல்லாசபுரி வாசிகளானோம் நாம். பலர் முன் தாலி கட்டி சர்ட்டிபிகேட் பெற்றுக் கொண்ட தம்பதிகளில்லையே தவிர வேறு ஒரு குறையுமில்லை

ஆடவர்கள் எவ்வளவுதான் கேவலமாகத் திரிந்தாலும் அதைக் காட்டிக்கொடுக்காத 'இயற்கை' எங்கள் பெண் இனத்தைமட்டும் வஞ்சித்துவிட்டது. ஆம் இன்று நான் கர்ப்பிணி. வயிற்றில் மூன்று மாதம். இன்னும் சில வாரங்கள் கழிந்தால் என்னை அம்பலப்படுத்திவிடும். என் தவறை இன்று நன்குஉணர்ந்துவிட்டேன்.

கல்யாணம் செய்து கொள்ள உங்களைத் தூண்டினேன். நீங்கள் முதலில் கருச் சிதைவுக்குத் தூண்டினீர்கள் அன்னை. முயன்றேன் பலப்பல வகைகளில். ஒன்றும் பயன்படவில்லை. உங்கள் வீட்டிலும் சம்மதிக்கமாட்டேன் என்கிறார்கள் என்றுகூறி வந்தீர்கள். சுயமுயற்சியில் பொருள்யீட்ட முடியாது, பிறர் ஊதியத்தில் உண்டு, ஊர்சுற்றி சீர்திருத்தம் பேசித் திரியும் உங்கள் "சீர்திருத்தவாதி" பட்டம் எனக்கு நன்கு புலப்பட்டது. இல்லாவிட்டால் எவ்விதமாகவாவது நாம் பிழைத்துக்கொள்ளலாம் என்று கிளம்பிவிடமாட்டீர்களா?

என் நிலைமை நாளுக்குநாள்

தற்கொலை!

1950ம் வருஷத்தில் அமெரிக்காவில் 16993ம், ஜப்பானில் 16311ம், பிரான்ஸில் 6376ம், பிரிட்டனில்4788ம், ஸ்பெயினில் 1518ம் தற்கொலைகள் நடந்திருக்கின்றன. அயர்லாந்தில்தான் தற்கொலை ரொம்பவும் குறைவு. அங்கு தற்கொலை லட்சத்துக்கு முறையே 4·2 ஆண்கள், 0·9 பெண்கள் விகிதத்திலிருக்கிறது.

தற்கொலை புரிய உயரமான இடத்திலிருந்து கீழே விழுதல் முதல் கிருமி ஒழிப்பு மருந்துகளை குடித்தல்வரை 120வழிகள் இருக்கின்றனஎன்றும், 45வயதுக்கும், 75 வயதுக்குமிடையேயுள்ளவர்களிடையேதான் தற்கொலைபெரும் அளவில் நடந்திருக்கிறது என்றும், எல்லா நாடுகளிலும் பெண்களைவிட ஆண்கள்தற்கொலையே அதிகமாக அதாவது 3 அல்லது 4 ஆண்களுக்கு ஒருபெண் வீதம் இருந்துவருகிறது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது.

மாறுவதை அறிந்த நீங்கள் இப்பொழுது இங்கு வருவதையும் நிறுத்திக்கொண்டீர்கள். என் மீது தனி கௌரவம் பாராட்டி வந்த என் தலைவியின் முகத்தைக் காணவே கூசுகிறது. அவர்களுக்கும் அவர்களது முன்னேர்க் கால் நிறுவப்பட்டுள்ள ஆச்சிரமத்திற்கும் அவச்சொல் தேடிக் கொடுக்க வந்துள்ளதை நினைக்க நினைக்க என் மனம் வெடித்து விடும்போல் இருக்கிறது.

இன்றுவரை நான் கற்பிலிருந்து நழுவவில்லை. தங்கள் ஒருவரைத் தவிர வேறொருவரை ஆடவரை நான்மனத்தாலும் தீண்டவில்லை. இங்குள்ள பிறசகோதரிகளைப்போல் நடமாட எண்ணம் கொண்டால், உங்களுக்கு இந்நீண்ட தபால் எழுதவேண்டிய சந்தர்ப்பமே இருந்திருக்காது.

உங்கள்போன்ற "போலி சீர்திருத்தவாதிகள்" இனியாவது இப்படி எங்கள்போன்ற அபலைகளின் வாழ்வை பாழ்படுத்தாது உண்மைச் சீர்திருத்தவாதிகளின் பெயருக்கு இழுக்கு தேடிக் கொடுக்காமலும் இருக்கவேண்டுகிறேன் இதுவே தங்களுக்கு எழுதும் கடைசிக்கடிதம்; இனி என்னைத் தாங்கள்காணமுடியாது இத்தபாலைத் தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்வேளையில் அதிசய நிகழ்ச்சி ஒன்று ஆச்சிரமம் சம்பந்தமாகவும் கேட்க நேரிடலாம். இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

அன்புக் காதலி
மனோன்மணி"

இப்படி அவன் தபாலைவாசித்துக்கொண்டு இருக்கும்போது அறைக் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டு, வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு திறந்தான்.

"இதைப் படித்தாயா தம்பி! சாந்தி ஆச்சிரமப் பெண்ஒருவள் ரயில்வே லைன் ஓரமாக நடந்து சென்றுகொண்டிருந்தவள், திடீரென கல்தடுக்கி விழ, அப்பொழுது அவ்வழியே வந்துகொண்டிருந்த டிரெயின் ஏறி ஆள் அடையாளம்தெரியாமல் அரைக்கப்பட்டுவிட்டாளாம்" என்று அவன்தாயார் கூறி அன்றுவந்த தினப் பத்திரிகையை அவன் கையில் கொடுத்தாள்.

இலங்கை பூராவிற்கும் 'மகிழ்ச்சி'யின் சோல் ஏஜண்டாக நாங்கள் ஏற்றிருக்கிறபடியால் இலங்கையில் சப் ஏஜன்ஸி எடுக்க விரும்புவோர் எங்களுக்கு எழுத வேண்டுகிறோம்.

த. தம்பித்துரை—நியூஸ் ஏஜண்ட்,

நெ, 226, ஆஸ்பத்திரி ரோடு, :: யாழ்ப்பாணம். (சிலோன்)

கார்டியோபோன்

பா. கலைச்செழியன்—சென்னை

இரண்டு சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருக்கின்றனர்! ஒருவன் நோயாளியாகவும் மற்றொருவன் வைத்தியனாகவும் நடிக்கிறான். நோயாளியின் மார்புமீது காகிதச் சுருளை வைத்துக் கொண்டும் ஒரு முனையை தன் காதில்வைத்துக்கொண்டும் வைத்தியனாக நடித்தவன் இருந்தான்! இந்த காட்சியிலே என்ன விநோதம் இருக்கிறது? சிறுவர்கள் விளையாடுவது சகஜந்தானே? ஆனால் இந்த விளையாட்டிலே விளைந்த கருவிதான் இன்றைய வைத்தியர்கள் கழுத்திலும், காதிலும் அணிசெய்யும் ஸ்டெதெஸ்கோப்!

டாக்டர் லெக்னெக் என்பவர் தற்செயலாக அந்த விளையாட்டைக்கவனித்தார். ஏன் நாமும் நோயாளிகளை இம்முறையில் பரிசோதனை செய்யலாகாது என கருதினார். அதன் விளைவுதான் ஸ்டெதெஸ்கோப் உருவாகியது.

மேற்படிகருவி உருவாவதற்கு முன்பு வைத்தியர்கள் நோயாளிகளை பரிசோதனை செய்வதென்றால் மிகவும் சங்கடமாக இருக்கும். அதுவும் பெண் நோயாளிகளை பரிசோதிக்க வேண்டும் என்றால் சொல்லவே வேண்டியதில்லை! சங்கடமான நிலைதான்! அத்தகைய சங்கடத்தை தீர்த்து வைத்தது "ஸ்டெதெஸ்கோப்!"

லெக்னெக் ஸ்டெதெஸ்கோப்பைக் கண்டுபிடித்த காலத்தில் காகிதக் குழாயாகத்தான் வெளிவந்தது நாளடைவில் மரப்பட்டையாக மாறி—ரப்பர்க் குழாயாக உருவெடுத்து இன்று பிளாஸ்டிக்கினால் ஸ்டெதெஸ்கோப்உருவாக்கப்பட்டுவருகிறது

ஸ்டெதெஸ்கோப் கருவியானது அதை அணிந்திருப்பவருக்கு மட்டும் இதயத்துடிப்பைக் கேட்கும்படி அமைந்துள்ளதல்லவா? ஆகவே அதிலே ஒரு புதியமாற்

றம் காண விரும்பினார் டாக்டர் புருனோ என்பவர். அதன் விளைவுதான் 'கார்டியோபோன்' உருவாகியது. கார்டியோபோன் கண்டுபிடிக்கப்பட்டது வைத்திய மாணவர்களுக்கு உதவியாக உள்ளது என்று சொல்லவேண்டும். இதனின் விசேஷ அம்சம் ஒன்றும்பிரமாதமில்லை! ஸ்டெதெஸ்கோப் கருவியினின்று வரும் இதயத் துடிப்பை (Amplifier) 'ஆமப்ளிபையர்' எனும் பெருக்கியினால் ஒலியை அதிகப்படுத்தி (Speaker) பேசும்குழாய்மூலம் வெளியிடச்செய்வதேயாகும்!

சுருங்கச் சொன்னால் ஸ்டெதெஸ்கோப்பின் சப்தத்தை அதிகப்படுத்துகிறது என்பதுதான். பார்வைக்கு இது வானொலிப் பெட்டியைப்போன்றிருக்கும்! ஸ்டெதெஸ்கோப்பை மார்புமீது வைத்துக்கொண்டால் (மற்றொரு முனை பெருக்கியும் பேசும் குழலும் அமைந்துள்ள பாகத்தில் இருப்பதால்) "லப்க்—டபக்" என்று துடிப்பை வெளிப்படுத்துகிறது.

இந்த கார்டியோபோன் ஆசியாக் கண்டத்திலேயே ஒன்றே ஒன்று சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில்தான் இருக்கிறது. மேற்படி கார்டியோபோன் சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற மருத்துவக் கல்லூரியின் கண்காட்சிசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

சத்திய வேதமாகிய
பைபிளை ஆழ்ந்து படிக்க
வேத மாணாக்கர் ஐக்கிய
சங்கத்தாரால் தமிழில்
வெளியிடப்பட்டிருக்கும்
வேதோபதேசவினாவிடை
என்ற புஸ்தகம்
எங்களிடம் கிடைக்கும்.
விலை: சாதா பைண்டிங்
ரூ. 0—12—0
அட்டைப் பைண்டிங்
ரூ. 0—14—0
தபால் சார்ஜ் வேறு

1, 3, 5, 7, 14, 20 பவுண்டு டின்களில் காபி பவுடர்
சில்லரையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும்.
சிக்கரி கலந்த காபி பவுடரும் கிடைக்கும்.
எட்வர்ட் காபி ஒர்க்ஸ், விருதுநகர்.

புயலுக்குப்பின்.....?

[சித்தன் ராமசாமி—விருதை]

அன்று இரவு 8 மணி இருக்கும். கணவனின்படத்தின்முன் ராஜம் கண்ணீர் சிந்தியவாறு உட்கார்ந்திருந்தாள். அவளுடைய ஒருஆண்டு நிறையாத செல்வ மைந்தன்மோகன் தனக்குப் பக்கத்தில் கிடந்த விளையாட்டுச் சாமான்களுடன் கொஞ்சிக் கொண்டிருந்தான்.

அந்தப் பொம்மை, அவன் கொடுத்த பிஸ்கத்தை சாப்பிடாமல் கீழேபோட்டுவிட்டதே என திரும்பத் திரும்ப அதன் வாயில் ஊட்டிக்கொண்டிருந்தான்.

இடையிடையே தன் தாயின் விம்மும் குரலைக்கேட்ட அந்த சின்னஞ்சிறுகுழந்தை திரும்பிப் பார்த்தது. அதற்கு என்ன தெரியும் தன் தாயின் கவலை?

சிலதினங்களுக்கு முன்தான் முதன்முதலாக அரிசிச் சாதம் வாயில் ஊட்டியிருந்தாள் அவனுக்கு. அப்போது எவ்வளவு ஆனந்தமாக சுவைத்து சாப்பிட்டான் அவன். அன்று அவளுடைய உள்ளம் எவ்வளவு ஆனந்தத்தில் மூழ்கி இருந்தது.

தன்தாய் தனக்கு ஊட்டியது போல் பொம்மைக்கும் பிஸ்கத்தை வாயில்ஊட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான் அவன்.

எந்தநேரமும் தன் மகனுடன் விளையாடி மழலைச் சொல் கேட்டுக்கொண்டிருந்த ராஜத்திற்கு, ஏழு தினங்களாக அவனைப்பற்றியே நினைக்காமல் அவளுடைய உள்ளத்தில் பூகம்பம் ஏற்பட்டிருந்தது. மேலும் அன்று மாலை 7-15க்கு டெல்லி ரேடியோ நிலையத்திலிருந்து கேட்ட வானிலைச் செய்தியை நினைத்து நினைத்து புழுவாக துடித்துக்கொண்டிருந்தாள் அவள்.

அவள்கணவன் சோமசுந்தரம் ஒரு இன்சூரன்ஸ் ஏஜெண்ட். பத்தாயிரம் ரூபாய்க்கு இன்சூரன்ஸ் செய்து கொள்வதாக அவருடன் படித்த நண்பர் வரச் சொல்லி இருந்தாராம். மதுரையிலிருக்கும் இவர் இந்த சமயத்தில்தானா நாகபட்டினம் போயிருக்கவேண்டும்?

கணவனை நினைத்து கவலையால் ஏங்கிக்கொண்டிருந்தாள் அவள். தெருக்கோடியிலிருந்து 'புயல் புயல்' என்ற இடிமுழக்கம்போல் சத்தம் கேட்டது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தலைநிமிர்ந்து கேட்டாள்.

ஒரு போலீஸ் லாரி இவள் வீட்டுக்குப் பக்கத்தில் வந்து நின்றது. 'புயல் இன்னும் 36

மணிநேரத்தில் வரும். எல்லோரும் அவரவருடைய வீட்டிலேயே பத்திரமாக இருக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்' என்று அந்த லாரியிலிருந்து சொல்லிக் கொண்டே போனார்கள்.

36 மணி என்று அவர்கள் சொன்னது 36 நிமிஷம் என்று தான் அவளுக்கு கேட்டது. 'ஹோ' என்று வாய்விட்டுக் கதறினாள். தாயின் அழுகுரலைக் கேட்ட குழந்தைமோகன் விளையாடுவதைவிட்டு அழஆரம்பித்துவிட்டான்.

தான் கொடுத்த பிஸ்கத்தை பொம்மை உண்ணவில்லையே என்ற வருத்தம்போலும் அவனுக்கு. அவன் அழுகை ஓயவே இல்லை.

அழும் குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு கணவனின் படத்தின்முன் சாய்ந்துவிட்டாள் அவள்கண்களிலிருந்து நீர்ஆறாக பெருகிக்கொண்டிருந்தது. அன்றுஇரவு முழுவதும் அவள் சாப்பிடவே இல்லை.

தன் மாமியாருடன் சண்டையிட்டுக்கொண்டு தனிக் குடித்தனம் வந்ததின் கஷ்டத்தை இப்போதுதான் உணர்ந்தாள் அவள்

தன் கணவனுடன் தனித்து இன்பமாக வாழலாம் என்று நினைத்திருந்த அவள் தலையில் இடிபோல் விழுந்த செய்தியைக் கேட்டு, அவளுக்கு ஆறுதல்கூற இப்போது ஒருவரும் இல்லை.

"லக்ஷக்கணக்கான மரங்கள் சாய்ந்துவிட்டன; சினிமாகொட்டகைகள் தரைமட்டமாகிவிட்டன; தங்களுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக கோவிலில் அடைக்கலம் புகுந்த பலர்மீது கோவிலின் சுவர் இடிந்துவிழுந்து மாண்டுவிட்டார்கள். கடல் நீர் ஊருக்குள் வந்து உயிர்ச் சேதம்ரொம்பஏற்பட்டுவிட்டது. சேதம்பற்றிய முழு விபரமும் இன்னும் தெரியவில்லை'' இப்படி இன்னும் எத்தனையோ பயங்கரமான செய்திகளை பத்திரிகை வாயிலாகப் படித்திருந்தாள்.

இவ்வளவு ஆபத்துகளுக்கிடையில் தன் கணவனுக்கு ஒன்றும் நேராமல் இருக்கவேண்டுமே என்று ஆயிரம் தெய்வங்களை பலமுறை வேண்டினாள்.

"ஐயோ! எங்களை ஏன் இப்படிப் பிரித்து வைத்தாய்? அவரும் இங்கு இருந்து, புயல் வந்தாலும் பரவாயில்லையே! அவருடைய காலடியிலேயே உயிரை விடுவேனே! ஒருவேளை அவர் உயிருக்கு ஏதாகிலும் நேர்ந்து புயல் இங்கு மட்டும் வராமல் நான்மட்டும் உயிர் வாழ நேர்ந்தால்.........''

சூன்யமாக இருந்த எதிர் காலத்தைநினைத்து அவள்நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்தது.

வெளியே இலேசாகசிலுசிலுப்புடன் காற்று அடித்துத் தூறிக் கொண்டிருந்தது. புயல் வந்து

விடுமோ என்று எல்லோர் உள்ளத்திலும் திகில் குடிகொண்டிருந்ததாகத் தெரிந்தது. என்ன செய்வது என்றே தெரியாமல் துடித்தாள். அவள் மடியில் குழந்தைமோகன் அழுதுஅழுது அசந்து தூங்கிக்கொண்டிருந்தான். அவன் சின்னஞ்சிறு உள்ளத்திலிருந்து பொருமும் எதிரொலி இன்னும் கேட்டுக்கொண்டிருந்தது.

நடுநிசிக்குமேல் அவள் எப்போது கண்மூடினாளோ அவளுக்கே தெரியாது. பொழுது விடிந்து வெகுநேரமாகியும் இன்னும் அவள் எழுந்திருக்கவே இல்லை.

யாரோ கதவை பலமாக தட்டும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு கண்விழித்தாள். மோகன் பொம்மையுடன் சிரித்து விளையாடிக்கொண்டிருந்தான்.

தூக்கஅசதியில் மெல்லமெல்ல சென்று கதவைத் திறந்தாள். சூரியனைக் கண்ட தாமரையைப்போல் அவள் கண்கள் பிரகாசமாக இருந்தன. பாலைவனத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த அவளை தேவதை வந்து சோலைவனத்தில் கொண்டுவந்துவிட்டதுபோல மகிழ்ச்சியடைந்தாள் அவள்.

“என் ராஜம்! உன்முகம் என்னமோபோல் வெளுத்திருக்கிறதே, இரவு தூங்கவில்லையா?” என்று கேட்டுக்கொண்டே உள்ளேவந்தான் சோமசுந்தரம்.

‘அத்தான்’ என்ற ஒரேசொல் தான் சொன்னாள்ராஜம். அதற்குள் கீழேசாய்ந்துகொண்டிருந்த அவளை தன் இரு கரங்களால் அணைத்துபிடித்துக்கொண்டான் அவன். எந்த உலகத்தைப்பற்றிய நினைவும் அப்போது அவளுக்கு இல்லை.

ஏழு, எட்டுநாட்களாக அவள் அனுபவித்த பிரிவுத் துயரால் தன்கணவனை இப்போது கொஞ்சங்கூட அப்பால்போகவிடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தாள்.

குழந்தை மோகன் பொம்மையைக் கீழே போட்டுவிட்டு கைகொட்டி சிரித்துக்கொண்டிருந்தான், பொம்மை அவன் கொடுத்த பிஸ்கத்தை சாப்பிட்டதாக நினைத்து.

அவளுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மனப்புயல் நீங்கியவுடன் அவள் தன் கணவனை நிமிர்ந்து பார்த்தாள். புயலுக்குப்பின் ஏற்படும் அமைதி அவள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. ★

எழுத்தாளர்க்கு!

கவிதை, கட்டுரை, கதைகள் கைவசம் நிறைய இருப்பதால், தயவுசெய்து யாரும் மேற்கொண்டு அனுப்பி வைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அது சம்பந்தமான கடிதங்களுக்கும் பதில் எழுதுவதற்கில்லை. ரிப்ளை கார்டும் எழுத வேண்டாம். [ஆசிரியர்]

பணம்

(பெரியகுளம் சுப்பராயலு)

தொழிலாளி:

இளம்பரிதி அலைகடலில் குளித்து விட்டு
எழிற்காட்சி தருமுன்னர் எங்கள் கூட்டம்
விழிப்புற்று விருப்புற்று குருதி யெல்லாம்
வியர்வையெனும் வடிவினிலே வடித்துத் தந்தும்
அளவறிந்து கூலிபெறும் நிலைமை இல்லை!
அச்சச்சோ! பணமென்ற சொகுசுப் பெண்ணாள்
உளமுருகி எம்மோடு நட்புக் கொள்ள
ஒருநாளும் கருதாமல் உருளு கின்றாள்!

முதலாளி:

ஒருலட்சம் பலலட்சம் கோடி யாக
உறங்காமல் உண்ணாமல் திட்டம் போட்டு
அரும்பாடு பட்டுத்தான் சேர்த்திட் டாலும்
அவனியிலே காணாமல் இகழ்ந்து பேசி
துரும்பென்று மதிக்கின்றார்; கண்டு விட்டால்
துதிக்கின்றார்; என்சொல்வேன் பணமே! உன்னை
விரும்புகின்ற காரணத்தால் இரும்புப் பெட்டி
வீட்டினிலே வைத்துள்ளோம், வந்து சேர்வாய்!

காதலன்:

நான்வாழ நாவிற்குச் சுவை மிகுந்த
நல்லுணவு நல்லின்பம் முத்தம் தந்தாள்,
கான்வாழும் மான்விழியைப் பழிக்கும் எந்தன்
காதலியோ டில்வாழ்ந்து வாழ்வு காக்க
நான்பொருளைப் பெறவேண்டி கடல்க டந்தேன்,
நலிவுற்றேன் பணஞ்சேர்க்க முடிய வில்லை,
தேன்மொழியாள் அதரத்தைச் சுவைக்க வீடு
திரும்புவதாய் வரைந்திட்டேன் பணமே வேண்டாம்!

காதலி:

மனமொத்து மகிழ்வுற்று மகிழ்ச்சி யூட்டும்
மக்களினை அளவுடன்நாம் ஈன்று வாழ
நினையாமல் நிலையாத செல்வம் சேர்க்க
நினைத்தீர்கள்; நன்றில்லை; என்றேன் அன்றே!
கணமேனும் சுணங்காமல் வாரீர் இன்றே
கனிமுத்தம் நனிமிகநான் தருவேன் அத்தான்!
அணிகலன்கள் எனக்கெதுவும் வேண்டாம்; நீங்கள்
அருகினிலே இருந்துவிடில் கொள்ளை இன்பம்!

ஆசிரியன்:

எம்மிடத்திற் கல்விகற்ற பிள்ளை யெல்லாம்
எழுநூறும் எண்ணூறும் திங்கள் தோறும்
கும்மாளம் போட்டபடி வாங்கக் கண்டோம்;
குடிக்கின்ற கஞ்சிக்கும் உடைக்கும் கூட
எம்முடைய வருமானம் போத வில்லை;
எம்கையில் இருக்கின்ற பிறம்பு கண்டோ?
எம்மிடத்தே அண்டாமல் ஓடு கின்றாய்!
இருந்தாலும் குறையொன்றே கடிவோம் வா!வா!!

திருடன்:

பசியாலே மிகநொந்து பிச்சை கேட்டோம்
பணக்காரர் தரமறுத்தார் அந்தோ! இன்னும்
புசியாமல் ஈயாமல் சிறைப்ப டுத்தும்
பொன்பொருளை வெளிக்கொணர முயலும் போழ்து
மசியாமல் மாற்றாரால் அடியும் தந்து
மானத்தை வாங்கிப்பின் சிறையில் தள்ளி
வசிக்கின்றாய் வையத்தில் பணமே! உன்போல்
வஞ்சகங்கள் புரிகின்ற பொருள்வே றில்லை!

பணம்;

அப்பப்பா! பணமென்ற உருவில் தோன்றி
அடைந்திட்ட துயரமெல்லாம் போதும்! போதும்!
எப்போதும் ஊர்சுற்றும் வேலை; மேலும்
என்னாலே பைத்தியமாய் மாறி விட்டோர்
இப்புவியில் மிகவுண்டு; அதனா லென்றும்
இனிமீண்டும் பணமாகப் பிறக்க ஒப்பேன்!
நப்பாசை என்மீது கொள்ள வேண்டாம்,
நல்லோராய் வாழ்ந்திடுவீர்! வணக்கம்; நன்றி!

எதைச் செய்வது?

(ஜெயராஜ்—பம்பாய்)

புத்தகத்திலேயே முழுக் கவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்த நான், எதிர் வரிசையில், ஓர் பெண்ணின் மடியிலிருந்த சிறுகுழந்தையின் அழுகுரலால் என் கண்களை அங்கே திருப்பினேன்.

ஏழையன்னையின் மடியில் இருக்கைகொண்டிருந்த, அந்த 'சிறியது' கதறியது வயிற்றுப் பசியால்தான் இருக்கவேண்டும், பால் ஊட்டினாள் அன்னை......! ஆனால், எலும்பும் தோலுமாக காட்சியளித்த அந்தப்பெண்ணின் மார்பில் பால் ஏது......?

அவர்தம் மராட்டிய மொழியில் பேசி, அக் குழந்தையின் அழுகையை நிறுத்த இயலாத நான், பேசாமல், கதறும் அந்தக் குழந்தையை கனிவு நிறைந்த கண்களால், கண்டுகொண்டேயிருந்தேன். என் சிந்தனை... அங்கேயே நின்றுவிட்டது.

2

சில கணங்கள் கழிந்தன. அடுத்த 'ஸ்டேஷனிலும்' நின்றுவிட்டு மறுபடியும் புறப்பட்டது வண்டி. அந்த 'ஸ்டேஷனில்' ஆட்கள் அதிகம் ஏறவுமில்லை; இறங்கவுமில்லை. ஆனால் ஓர் கண்ணற்ற குருடன்...? பிச்சை வாங்குவதற்காக ஏறினான் போலும்! வழக்கம்போல்; தனக்கே உரிமையான, தானே உருவாக்கிய, ஓர்மெட்டில் ஓர் பாட்டைத் தொடங்கினான். அவன் வாய் பாடிக்கொண்டேயிருக்க அவனது வலது கை ஒவ்வொரு பிரயாணியின் முன்னும் நீண்டு கொண்டேயிருந்தது. அவனுடன் நீட்டப்பட்ட, அந்தக் கையில் ஓர் செல்லாக் காசுகூட விழவில்லையே, ஏன்......? இரக்கம், கனிவு, கருணை, அன்பு, பச்சாதாபம் என்ற மனிதப் பண்புகளெல்லாம் மாண்டு மண்ணோடு, மண்ணாகிவிட்டனவா? இல்லையெனில், நம் நாட்டு மக்களின் பொருளாதார நிலை—கையில் ஓர் தம்பிடிகூட இல்லாத நிலைக்கு அவர்களைத் தாழ்த்திவிட்டதா? குருடன் பாட்டும் இன்னும் முடியவில்லை. கையில் ஓர் காசுகூட விழவுமில்லை.

3

அடுத்த ஸ்டேஷனிலும், 'ட்ரெயின்' நின்றது. சிலர் இறங்

கினர். சிலர் எறினர். ஆனால், குருடனும் இறங்கவில்லை அழும் குழந்தையின் குரலும் அடங்கவில்லை. வண்டியில், மற்றுமொரு புதிய குரல்.

“சூடா...கரம்.. சூடா......” என்று கூறிக்கொண்டே, கூடை ஒன்றை கைகளில் சுமந்தவாறு ஒருவன் நடந்துவந்தான் (சூடா —காரமும், இனிப்பும், புளிப்பும் கூடிய ஓர் மராட்டிய ‘மிக்ஸர்’)

என்னுடைய கைகள், சட்டைப் பையைத் துழாவின. ஓர் அணா கிடந்தது! அன்று முப்பதாம் தேதி. மறுநாள் கிடைக்கப்போகும் சம்பளத்தை ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும்—என் பையில் பணமில்லாதது ஆச்சரியமா...?

ஒரு அணாவுக்கு சூடா வாங்கி அழும் குழந்தைக்கு கொடுக்கவா...? இல்லையெனில், அந்த ஓரணாவை பிச்சைக்காரனுக்கு இடவா...? மனதிலே பெரும் போராட்டம்!

சூடாக்காரனின் கூவுதல் ..! குழந்தையின் கதறல்...! குருடனின் பாடல்...! இவை மூன்றும் ஒன்று கலந்த ஒலி, என் செவிகளைத் துளைத்து, மூளைக்கேறி என்னை சிந்தனையில் ஆழ்த்திவிட்டது...! திடீரென்று வண்டி நின்ற அதிர்ச்சியில் கண் விழித்தேன்.

4

குழந்தை சிரித்து விளையாடியது...! அதன் சிறு கையில், ஓர் சூடாப் பொட்டலம்? குருடனின் கையிலிருந்து, ஓரணா, சூடாக்காரனின் கைக்கு மாறுவதை என் கண்கள் கண்டன!

என்ன ஆச்சரியம்.? கண்ணுள்ள பலரிடமில்லாத கருணையுள்ளம், கண்ணில்லா ஓர் குருடனிடம்...! பணமுள்ள பலரிடமில்லாத, பண்பு, பணமில்லா ஓர் பரதேசியிடம்...!

என் ஓரணாவை, அவனுக்கே கொடுத்துவிட வேண்டுமென்ற முடிவுடன், பையைத் துழாவி, கையில் காசுடன் திரும்பினேன். அவனைக் காணோம்.

ஆனால்......?

அடுத்த பெட்டியிலிருந்து ஓர் தாழ்ந்த குரல், என் காதுகளை எட்டியது. அவன் பாடிய அதே பாடலைத்தான் பாடிக்கொண்டிருந்தான். அங்காவது இவனுக்கு கருணை காட்டப்படுமா......? அல்லது இவனே கருணைகாட்ட வேண்டுமா...?

5

என் கண்கள் முன் திரும்பின.

பலகையில் காணப்பட்டது, ரயில்வே நிர்வாகம் ஒட்டிய விண்ணப்பம்,

"விற்பவர்களேயும், ஏற்பவர்களேயும்— வாங்குவதன் மூலமும், கொடுப்பதன் மூலமும் ஆதரிக்காதீர்கள்..."

என்னைக் கேலி செய்து சிரித்தது, அந்த விளம்பரம்......? அடுத்த ஸ்டேஷனில் நானும் இறங்கி நடந்துகொண்டேயிருந்தேன்.

குழந்தைகளிடம் அன்புகாட்டவும் வேண்டும்; ஏழைகளுக்கு இரங்கவும் வேண்டும்; சட்டத்திற்கு கட்டுப்படவும் வேண்டும்—இவற்றில் மனிதன் எதைச் செய்வது......? என்ற கேள்வி, அடித்து ஓய்ந்த மாதாகோவில், மணியின் ஓசையைப்போல என் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தது... !

பொல்லாத கண்கள்!

ஒரு வருஷத்தில் நாம் 90,00,000 தடவை இமை கொட்டுகிறோம்.

ஒருதரம் இமை கொட்டிஞல் கால் அங்குல நீளத்திற்கு இமை விரிகிறதாம். வருஷத்தில் இம்மாதிரி இமை விரிவதை மட்டும் கணக்கிட்டால் அதுவே 7,200 மைல்கள் ஆகிறதாம்.

ஒவ்வொரு தரமும் இமை கொட்டும்போது மூன்றில் ஒரு பங்கு விஞடி பிடிக்கிறது. ஒருவர் எவ்வளவு நேரம் விழித்துக் கொண்டிருக்கிருரோ அதில் 10 சத விகிதம் நேரம் கண் மூடிக் கொண்டிருக்கிருராம்.

ஒவ்வொரு தடவையும் இமை கொட்டும்போது கண்ணிலுள்ள பாப்பா மேலும் கீழுமாக நகருவதால் பார்வை ஒரு சிறிது மங்குகிறது. வேகமாக இமை கொட்டுபவர்கள் விழித்திருக்கும் நேரத்தில் 40% சதவிகிதம் நேரம் கண்மூடிக்கொண்டிருப்பதாகவே கணக்காகிறதாம்.

இந்த இமை மூடும் கணக்குப்படி 5 மணி நேரத்தில் 100 மைல்களே மோட்டாரில்கடக்கும் ஒருவர் 10மைல்தூரம் கண்ணே மூடிக்கொண்டே மோட்டாரை ஓட்டியிருக்கவேண்டும். இப்படி 'ஆஸ்திரியமாகஸைன்' சஞ்சிகையில் ஒருவர் எழுதியிருக்கிருர்.

இது நிஜமா?

— வாகன் —

தன்மை

காதல் தவறினுல் கண்ணுடி போன்று நொறுங்கிவிடுவதல்ல, வெள்ளியின் தன்மையுடையது.

—ஒரு தட்டான்

நீளம்

அசைவைக் கண்டு புரிந்து கொள்ள பார்வையை அகலமாக்கு கிருர்கள் செவிடர்கள். காதலில் காதுகள் நீளமாக்கப்படுகின்றன.

—ஒரு ஊமை பள்ளி ஆசிரியர்

பெருமை

கதைகளில் காதலை வர்ணித்து தான் பிரமச்சாரி என்று பெருமை கொள்ளுகின்றவனும், மனைவி சோரம் போய் பெற்றகுழந்தையை தனது என்று கொஞ்சுகிறவனும் ஒன்றுதாஞ?

—ஒரு எழுத்தாளன்

நிலை

குழப்பங்களில் விவாகரத்து வரை ஓடுகிற தம்பதி நிலையும், பயங்கர அலையில் தத்தளிக்கிற கப்பலும் ஒன்றுபோல, குழந்தையும் நங்கூரமும் நிலையாக்கிவிடு கின்றன.

—ஒரு மாலுமி

சொத்து

ஒருவன் அறிந்திருக்கிறதே அவன் சொத்து. குற்றத்தைத் தடுத்து திருத்த தயங்குகிறவனுக் கும்கருமிக்கும் என்னவித்தியாசம்

—மிஸ்டர் தயாளன்

ஒழுக்கம்

எஜமானனே விரட்டினுலும் நாய் அவனைக் காக்கவே பின் தொடருகிறது. ஒழுக்கத்தைக் காக்க சதிபதி எந்த சந்தர்ப்ப சூழ் நிலையிலும் பிரிந்து வாழலாகாது.

—ஒரு சதி

போட்டி

பெண்கள் உத்தியோகத்தில் போட்டியிடுகிருர்களே!—என்று பயப்படுகின்ற ஆண்கள் ஹோட் டல்களை பகிஷ்கரித்து மறியல் செய்ய முன்வரலாமே!

—ஒரு பெண் குமாஸ்தா

பயன்

படித்த ஒருசில பெண்கள் வழி தவறிவிடுகிருர்கள் என்பதற்காக படிக்கவே விடக்கூடாது என்று சொல்லிவிடலாமா? தீப்பெட்டி தொழிற்சாலையே அபாயம். அதற் காக தீப்பெட்டியை பயன்படுத்தா மல் இருக்கிறீர்களா?

—ஒரு தீப்பெட்டிசாலை ஆள்

தொழில்

பெண்களுக்கு மனைவி நிலையும்

தாய் நிலையும்தவிர வேறுதொழில் இல்லை. தொழில்இல்லாத பெண் களுக்கு வாழவழியும்வேறுஇல்லை

—பெர்னுட்ஷா

ஆரஞ்சு

ஆரஞ்சுப் பழத்தின் தோலை உரித்துத் தள்ளிவிட்டு சம பாகங் களாகப் பிரித்து அவைகளின் சுளை களை எண்ணிப்பாருங்கள்! ஒன்றில் ஆறும், மற்றொன்றில் ஐந்துமாக சுளைகளிருக்கின்றன. இதுபற்றியே இப்பழத்திற்கு 'ஆரஞ்சு' எனப் பெயர் வந்தது.

—ஒரு தமிழ் வித்வான்

கர்ப்பத்தடை பற்றி

ஒரே மேடையில் இரு கருத்துக்கள்!

ஸ்ரீமதி ராஜகுமாரி அமிர்தகௌரி

'பால்ய வயதில் விவாகங்களால் தான் ஜனத்தொகை எக்கச்சக்க மாகஉயர்ந்திருக்கிறது. தேசத்தின் இளைஞர்கள் இந்த வழக்கத்தை எதிர்த்து தீவிர பிரச்சாரம் செய்ய வேண்டும்'

பெண்கள்விவாகம்செய்துகொள் வதற்கு 22-வது வயதுதான் சரி யான பிராயம். இளம் வயதில் மணம் செய்துகொண்ட ஆயிரக் கணக்கான பெண்கள் கடைசியில் வருந்த நேருகிறது.

கர்ப்பத்தடைக்கு செயற்கை உப கரணங்களை உபயோகிக்கும் முறை யை நான் ஆட்சேபிக்கிறேன். இத் தகைய செயற்கை முறைகள் விரி வான அளவில் பரவினுல் அது துஷ்பிரயோகம் செய்யப்பட நேரும். அதனுல் ஒழுக்கக் குறைவுகளும் மலிய நேரலாம்.

கர்ப்பத்தடை ஆஸ்பத்திரிகளை சர்க்கார்ஏற்படுத்தி நடத்துவதென் பது சாத்யமான காரியமல்ல. மக் கள் அறியாமை மிகுந்தவர்களாக இருக்கிறுர்கள் என்பதும் அதற்கு ஒரு காரணம். தவிரவும் அந்தக் காரியங்களுக்கு சர்க்காரிடம் போதிய பணமில்லை.

கல்வி, சுகாதாரம் முதலிய துறை களில் சர்க்கார் முதலில் கவனம் செலுத்தியாக வேண்டியிருக்கிறது. மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்தாகவேண்டும்.

ஸ்ரீமதி ரேணுகாரே

செயற்கை உபகரண முறைகளில் கர்ப்பத்தடைஅனுஷ்டிப்பதுநல்லதே

ஒருசில மக்கள் மட்டுமே தன்ன டக்கம் காட்ட முடியும். கர்ப்பத் தடையால் ஒழுக்கக்கேடுகள் மிகுந் துவிடும் என்று நம்ப இடமில்லை. தற்போது பட்டினங்களிலும், கிரா மங்களிலும் அனுஷ்டானத்திலிருந் துவரும் கர்ப்பத்தடை முறைகள், தான் கூறஉத்தேசித்துள்ள விஞ்ஞா ன முறைகளைவிட தீங்குமிக்கவை.

ஒவ்வொரு பெரியநகரங்களிலும் கர்ப்பத்தடை ஆஸ்பத்திரிகளை ஏற் படுத்தி, நல்ல முறையில் ஆலோ சனைகள் கூற நிபுணர்களை அமர்த் த வேண்டும்.

பெண்களே! உங்கள் கருத்தென்ன?

ஏமாந்தவர் யார்?

[மீ. சு. இளமுருகு பொற்செல்வி]

நாகையில் சென்று, "பத்திரிகை விற்பனையாளரைப் பார்க்க வேண்டும்" என்று கூறினால் தோழர் கருப்பையாவைத்தான் காண்பிப்பார்கள். காரணம் அவர்தான் புதிது புதிதாக—மழை விழுந்ததும் பயிராகும் காளான்களைப்போல — எழுத்தாளராக, பத்திரிகாசிரியராக நினைப்பவர்கள் பொழுதொரு பத்திரிகையைப் பயிர் செய்வார்களே அப்படிப்பட்ட எல்லாப் பத்திரிகைகளுக்கும் விற்பனையாளராக இருந்தாரவர். பத்திரிகையைவிற்க அதாவது வாங்குபவர்களிடம் கொண்டு கொடுத்துவர ஒரு கை ஆள் தேவையல்லவா? எதிலுமே தந்திரமாக வாழ்ந்து வரும் கருப்பையா அதற்கும் ஒரு வழியைக் கண்டார். அவர் மீது அதிக அன்பு கொண்டு பழகிவரும் நண்பர் கந்தசாமியையே விற்பனைக் கை ஆளாக்கிக்கொண்டார். அவரும் நண்பருக்காக அந்த வேலையைச் செய்து வந்தார். "எங்கள் வீட்டுக்காரருக்கு அரண்மனையில் வேலை. சம்பளம் மாதம் முப்பதுநாள், அமாவாசையும் பாட்டமியும் அவரைச் சேர்ந்தது" என்பார்களே அதைப்போல்தான் கந்தசாமியின் சம்பளமும். நண்பனுக்கு உதவி என்ற எண்ணத்தால் அந்த வேலையைச் செய்து வந்தார். வேறு எவ்வித வருவாயும் எதிர்பார்த்து அவர் அந்தவேலையைச் செய்யவில்லை.

நாட்டிலே வரவர நாணயக் குறைவுதானே படர்கிறது, சீனாவில் செஞ்சீனா படர்வதுபோல. பலர் பத்திரிகை விற்பனையாளர்கள்—பொதுவாகப் புதிய பத்திரிகைகளுக்கு முன்பணம் கட்டுவதில்லை. தாம் பெரிய விற்பனையாளர் என்றும், நம்பிக்கையாக அனுப்பினால் உடனுக்கு உடன் மாதாமாதம் பணத்தை அனுப்பி விடுவதாகவும் எழுதுவார்கள். புதிய பத்திரிகைக்காரர்களும் எப்படியாவது விற்பனை பெருகட்டும் என்று எண்ணி அனுப்பி வைப்பார்கள். பின்னர் விற்பனையாளரோ பணத்தை அனுப்புவதில்லை. பத்திரிகை உரிமையாளர்கள் பல கடிதங்களை எழுதி, எழுதி அலுத்துப்போவதுடன் அந்தத் தபாற்செலவாவது மிச்சமாகட்டும் எனப் பேசாதிருந்து விடுவார்கள்.

விற்பனையாளர்களது இந்தச் சூழ்ச்சி முறையை வாசகர்களும் அறிந்துவிட்டார்களோ என்னமோ—அவர்களும் இந்த வழி

யைப் பின்பற்றலானார்கள். அதாவது பத்திரிகைப்பதிவாக அனுப்பும்படியும், மாதக் கடைசியில் மொத்தமாகத் தொகையைத்தருவதாகவும்கூறிவிடுவது. விற்பனையாளரும் இந்த விற்பனையால் கிடைக்கும் லாபத்தை எண்ணி மகிழ்ந்து தவருது அவர்களுக்குப் பதிவாகக்கொடுத்துவருவது. ஓரளவு பெருந்தொகை பற்றுனதும் பணங்கேட்கத் துவங்கினால் "நாளை—மறுநாள்" எனத் தவணைமேல் தவணை கூறுவது.

சிறுமீன்களைப் பெரிய மீன்கள் விழுங்குவதுபோல் விற்பனையாளர்களை—சில வாசகர்களும்; பத்திரிகையாளர்களை—சில விற்பனையர்களும் ஏப்பமிட்டுவருவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

விற்பனையாளர் கருப்பையாவோ முன்பணங் கட்டாத பத்திரிகைகளுக்குப் பட்டியல் பணம் அனுப்புவதேயில்லை. முன்பணம் பறிபோய்விடுமே என்ற பயம் அவருக்கிருந்தால்தானே பாக்கியைப்பற்றிக்கவலைப்படுவார்! விற்றுக் கிடைத்தவரை லாபம் என மகிழ்பவர். அவருடைய எடுபிடி ஆளான கந்தசாமியும் சம்பளமில்லாத ஆள். பின் கூறவா வேண்டும்? "மாடு வந்ததா பார்த்துக்கொள்" என்ற முறையில் அவரும் ஏனோ, தானோவாக நடந்துகொண்டார். எந்தக் காரணத்தாலோ நாணயக் குறைவு ஒருவனையமாக அவர்களை, அதாவது வாசகர்கள்; விற்பனையாளர்; எடுபிடியாளர்; பத்திரிகை உரிமையாளர் அனைவரையும் சுற்றி வட்டமிட்டுவிட்டது.

இதனால் புதிதாகத் தோன்றிய பலபத்திரிகைகள் வாழமுடியாது—வந்தவழியே திரும்பிவிட்டது. ஆகவே, கருப்பையா பணம் அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் அவற்றைப் பொறுத்தவரையில் இல்லாது போயிற்று மற்றும் சில பத்திரிகையாளர்கள் கடிதம், வழக்குத் தொடரப் போவதாக அறிக்கை ஆகிய யாவையும் கையாண்டும் பயன் இல்லாததால் அத்துடன் தொடர்பை அறுத்துக்கொண்டனர்.

கருப்பையா இப்போது பத்திரிகை விற்பனையாளர் அல்ல. முன்னாள் பத்திரிகை விற்பனையாளர். அவருடைய நண்பரும் எடுபிடி ஆளாக இருந்தவருமான கந்தசாமி தனதுவாழ்க்கைக்காக வெற்றிலை பாக்குக் கடை ஒன்றைத் தொடங்க எண்ணினார். எதற்கும் நண்பர் கருப்பையாவைக் கலந்து ஆலோசிக்கும் வழக்கப்படி கேட்டார். "நல்லா யோசனை செய்வோம். நானும் வருகிறேன். தஞ்சை சென்று பொருள்களை வாங்கிவருவோம்" என்றார். கந்தசாமி தன்னிடம் இருந்த நூறு ரூபாய்களையும் கருப்பையாவிடமே கொடுத்துவிட்டார். யாவும் அவருடைய விருப்பப்படி செய்யட்டும் என்ற எண்ணத்துடன் தஞ்சையை யடைந்தனர். "எழுபத்தைந்து

ரூபாய்கள் அளவில் கடைச் சாமான்கள் முடிந்துவிட்டது. மீந்த இருபத்தைந்து ரூபாய் கருப்பையாவிடமே இருந்தது. புகைவண்டியில் இருக்கும்போது, "கந்தசாமி! நினைவிருக்கிறதா? நாம் பத்திரிகைவிற்பனையாளராக இருந்தது. அதில்பொருளிழப்பு ஏற்பட்டது ஏராளம் என்பதும் உனக்குத் தெரிந்தது. அவ்வள வையும் கையிலேஇருந்து நானே போட்டுக்கொடுத்ததும் நீ அறிந்தது. உன் பங்குக்கு நீ கொஞ்சங்கூடக் கொடுக்கவில்லை. முழுதும் கொடுப்பதும் உன் நிலைமையில் முடியாததுதான். ஆகவே, எஞ்சிய இந்த இருபத்தைந்து ரூபாயை உன் பங்குக்காகச் சரி செய்துகொள்ளுகிறேன். சரி தானே" என்ருர் கைகார கருப்பையா.

கந்தசாமிதிடுக்கிட்டுவிட்டார். இது என்ன புதிர்? நானு விற்பனை செய்பவனுக இருந்தேன்? பங்குதாரனுக விரும்பினேன்? நண்பன் என்பதற்காக உதவி செய்துவந்தேன். அதற்கு அபராதம் இருபத்தைந்து ரூபாய் போடுகிருன்போலும் எனப் பல எண்ணிஞர். மறுத்துக் கூறிஞல் நண்பன் மனம் துயரடையும். போனல் போகிறது இருபத்தைந்து. நட்பிருக்கட்டும்என்று நினைத்து "சரிதான்" எனத் தலையாட்டிவிட்டார்.

முன்பணமின்றிபத்திரிகையை விற்பனைக்கனுப்பியவர்கள் ஏமாந்தவரா? விற்ற பத்திரிகையின் சந்தாவை வசூலிக்க முடியாத விற்பனையாளர்கள் ஏமாந்தவரா? சந்தா கொடுக்காது பத்திரிகை படிக்கும் வாசகர்களிருக்கும் போது சந்தாவை ஒழுங்காகக் கொடுத்துவந்தார்களே அவர்கள் ஏமாந்தவரா? சம்பளமில்லாது உதவி கருதி கை ஆளாக வேலை பார்த்ததுமல்லாமல் கைப்பொருளையும் இழந்த கந்தசாமி ஏமாந்தவரா? இவர்களில் ஏமாந்தவர் யார்?

இதுதான் அரசியல்!

அன்றும் இன்றும்

ஈ. வெ. ரா. கூற்று!

அன்று தூத்துக்குடியில்

படித்தவனும், பட்டதாரியும் வேண்டாம் நம் கட்சிக்கு. தங்கள் பகுத்தறிவுக்கும், சிறிது சுதந்திரம் வேண்டுமென்பவர்களுக்கும் எனது இயக்கத்தில் இடமில்லை. நான் சொல்வதை ஏற்று அப்படியே நடப்பவர்களுக்கே இங்கு இடம்.

இன்று உடுமலைப்பேட்டையில்

நான் சொல்வதை பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமேயல்லாது அப்படியே கண் மூடித்தனமாகபின்பற்றக்கூடாது

கார்டு கட்டுரைப் போட்டி 4 முடிவு

எனது பட்ஜெட்

எனது மாதவருமானம், ஆட்டுக்கு வால் அளந்து வைத்தாற்போல ரூபாய் ஐம்பதே விலைவாசிகள் விஷம போல் ஏறிக்கொண்டிருக்கும் இக்காலததில் இந்த ஐம்பதுரூபாயைக்கொண்டு நான்கு நபர்கள (நானும் என் மனைவியும் இரு குழந்தைகளும் உட்பட) அடங்கிய என் குடும்பத்தைப் பராமரிப்பது சிரமமே தான். என் குடும்பச் செலவுகளுக்காக இந்த ஐம்பது ரூபாயைக் கொண்டு ஒரு பட்ஜெட் தயாரிக்க முயன்றேன். துண்டு விழுந்துகொண்டேவந்து என்னை மண்டுவாக்கியது. மீண்டும் முயன்று சிக்கன முறையில் ஒன்று தயாரித்து முடித்தேன்.

அரிசி	ரூ 20—0—0
வீட்டு வாடகை	5—0—0
விறகு	3—0—0
பருப்பு வகை	3—8—0
உப்பு,மிளகாய்,காய்கறி	3-12—0
கடுகு, மிளகு, மஞ்சள்	1—0—0
எண்ணெய் வகையறு	2—0—0
சர்க்கரை,காப்பித்தூள்	1-12—0
பால், மோர்	4-12—0
இதரச் செலவுகள்	5—4—0
மொத்தம்	50—0—0

S M. கிருஷ்ணன், கோயமுத்தூர்.

(ரூ. 1. பரிசு பெற்றவர்.)

குடும்பத்தில் கணவன் மனைவி நாங்கள் இருவர்தான். வருமானமோ ஐம்பது ரூபாய். வாசமோ டவுனிலிருப்பது. இந்நிலையில் மிகமிகச் சிக்கனமான, அதேசமயத்தில் இன்றியமையாத் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ளுமளவுக்கு பெரும்சங்கடமான நிலைக்கிடையே பட்ஜெட் தயாரித்துக்கொண்டால்தான், மானத்தோடு மனிதன் மனிதனுகவாழமுடியும். அம்முடிவில் வாழ்வைநடாத்தும் நாங்கள் தயாரித்துக்கொண்ட பட்ஜெட் இதோ கீழே:

வீட்டு வாடகை	ரூ. 7—0—0
அரிசி	18—0—0
காய்கறிச் செலவு	3-12—0
பலசரக்குச் சாமான்	2—8—0
விறகு	1—8—0
எண்ணெய்	2—0—0
பால்	3-12—0
சலவை, முடிதிருத்த	2—0—0
வைத்தியத்திற்கு	3—0—0
விருந்து வகைக்கு	2—0—0
ஆடை	2—0—0
பூ, கேளிக்கை	2—8—0
மொத்தம்	50—0—0

வருமானமும் ரூ. 50. செலவும் ரூ 50. சேமிப்பிற்கு வழி இல்லை. சேமிப்புஇல்லாவிட்டாலும் கடன்வாங்கும்நிலை இல்லாது

இருந்தால் போதும் என்பதே எங்களுடைய அவா. ஒருவேளை வரும்நாட்களில் வந்தவிருந்தினர் விரைவினில் அகலவில்லை என்றாலும் அல்லது எதிர்பாராவகையில் நோய் எங்களிடையே பட்ஜெட்டைத் தாண்டி அதிகமாக உறவாடினாலும், அல்லது பிள்ளைப்பேறு தொடர்ந்து இருக்குமேயானாலும் அரசியல் மொழிப்படி எனதுபட்ஜெட்டில் துண்டு விழும்.

அ. கிருஷ்ணன், கோயமுத்தூர்.

* * * *

ஒரு சிக்கனமான தம்பதிகளும், அவர்களுக்கு அருமையாக ஒரு குழந்தையுமிருந்தால் கீழ்க்கண்ட பட்ஜெட்மூலம் ஆனந்தமாக வாழலாம். ஆனால் நம் அரசாங்கத்தில் ஐம்பதுக்கும்கீழ் சம்பளம் வாங்கிக்கொண்டு ஐந்தாறு பிள்ளைகளோடு அல்லல்படுவோருக்கு கீழ்க்கண்ட பட்ஜெட் அரை வயிற்றுக்கும் காணாதே.

அரிசி ரூ.	15—0—0
பருப்பு	1—0—0
பலசரக்கு	3—8—0
எண்ணெய்	1—8—0
பால்	4—0—0
மோர்	1—0—0
காய்கறி	6—0—0
வாடகை	7—0—0
வண்ணான், அம்பட்டன்	1—8—0
பொழுது போக்கு	1—8—0
உடைக்கு	2—0—0
பத்திரிகை	2—0—0
சேமிப்பு	3—0—0
பிறர்க்கு அன்பளிப்பு	1—0—0
மொத்தம்	50—0—0

சரோஜா பாண்டியன், விருதுநகர்.

* * * *

நாங்கள் இருவர், 1 வயதுள்ள குழந்தை. எங்களுடைய வருமானம் சுமார் ரூ. 50. எங்களின் நடைமுறை பட்ஜெட் அடியிற் குறிப்பிடப்பட்டுள்ளது நாங்கள் காபி சாப்பிடுவதில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அரிசி ரூ.	18—0—0
மளிகை சாமான்கள்	10—0—0
தயிர், பால், வெண்ணெய்	5—0—0
வீட்டு வாடகை	4—0—0
சினிமா, பத்திரிகை, சலவை, பார்பர் செலவுகள்	4—0—0
பிரயாணச் செலவு	3—0—0
ஆடைக்காக சேமிப்பு	4—0—0
தபால் முதலியவை	1—0—0
வேலைக்காரி	1—0—0
மொத்தம்	50—0—0

திருமதி நவநீதம், திருமாஞ்சேரி.

கார்டு போட்டி 5

பரிசு ரூ. 1

நான் நடத்த விரும்பும் தொழில்

கார்டின் ஒரே பக்கத்தில் மட்டும் எழுதி 28—2—53க்குள் அனுப்பி வையுங்கள்.

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

ஒருவர் இரண்டு கேள்வியே கேட்கலாம்.

எஸ். பாண்டியன், திண்டுக்கல்.

தமிழ் ஆட்சி மொழியாகி நீதி மன்றங்கள் தமிழிலேயே நிகழ ஆரம்பித்தால் என்ன நேரிடும்?

வழக்கறிஞர்களுக்கு முதலில் வேலையிருக்காது. வாதியும், பிரதிவாதியும்தான், தாங்களே நேருக்கு நேர் தர்க்கம் செய்ய ஆரம்பித்து விடுவார்களே!

வ. பெ. சிற்றரசு. கீழச்சந்தப்பேட்டை.

வறுமையின் எல்லை எது? சாவா? வாழ்வா?

தற்கொலை

இன்பத்தின் எல்லை எது? இன்பமா? துன்பமா?

ஆபத்து.

எஸ். பி. நாபன், கொத்தன்குளம்.

என்போன்றோர் கவிதைக்கு இடமில்லை என்றும், கதை, கவிதை, கட்டுரைக்கு நீங்கள் சில முக்கிய ஆட்களை வைத்துத் தொழில் நடத்துவதாகக் கூறுகிறார் என் தோழர் ஒருவர். தாங்கள் அப்படிச் செய்வது யாதுகருதி? இல்லையேல் என் நண்பர்தான் உளறுகிறாரா?

உங்கள் கவிதை இடம் பெறாததால் இக்கேள்வி எழுந்ததோ என்று நான் சந்தேகப்படுகிறேன்.

ந இராமையா, திருப்பாப்புலியூர்.

இன்றைய தி.மு.க. கொடியின் படிப்படியான மாறுதல்கள் எவை?

பாதி கருப்பும், பாதி சிவப்பும். ஆரம்பமுதல் இன்றுவரை இதுதான்

பெண்ணிற்கு மாத்திரம் கற்பு இருக்கவேண்டும், ஆண்களுக்கு அது ஏன் இல்லை.

யார் ஆண்களுக்கு இல்லை என்று சொன்னது? கற்பு என்பது இருசாராருக்கும் உரியதுதான்.

டி. செல்வரத்தினம், தூத்துக்குடி.

'பராசக்தி' படம் பார்த்தவர்களுக்கு அறிவுஒளி ஓடும்படி செய்திருக்கிறார்கள். ஆனால் சிலர் குருகுருக்கிறார்களே ஏன்?

குற்றமுள்ள நெஞ்சு குருகுருக்கத் தானே செய்யும்!

வி. எஸ். எம். நெய்னுமுஹம்மது. வேளாங்கண்ணி.

வாள்முனைக்கு அஞ்சாத நெப்போலியன் பேனா முனைக்கு அஞ்சியதேன்?

வாள்முனை உயிரைப் போக்கும். ஆனால் பேனாமுனையின் எழுத்துக்களால் வசப்பட்டவர்கள் உள்ளம் குமுறி எழும். இதுதான் காரணமாக இருக்கலாம்.

உண்மைக்கு உறைவிடம் எங்கே இருக்கிறது?

அவரவர் உள்ளத்தில்.

O. P. சாமி, ஸ்ரீவைகுண்டம்.

அழகில்லா அணங்கு, புகழில்லா ஆடவன், கற்பனைத்திறமில்லா கவி, பாதகத்துக்குஅஞ்சும்இராஜ

தந்திரி, போகத்தில் புரளாத பிர தானியர், பொய்யுரைக்கத் தெரி யாதசேடியர் ஆகியோருக்கு எந்த ராஜ்யத்தில் இடம் கிடைக்கும்?

சமத்துவம், சகோதரத்துவம் கொண்ட மனோராஜ்யத்தில் பேத மின்றி இடம் உண்டு!

சி. ராமசாமி, கரையங்காடு.

ஜாதிப் பெயர் குறிப்பிடக்கூடா து என்று எழுதிவிட்டு, ஆடி இத ழில் ஒருவரைக் குறிப்பிட்டிருப்பது சரியா?

தயவு செய்து அது எந்த இடத் தில்; கதை, கட்டுரைகளிலா, தலை யங்கத்திலா என்று குறித்துக் காட் டினால் நன்ருக இருக்கும். விளம் பரங்களிலும், பரிசு பெற்றவர்களி லுமாகஇருந்தால் அதை நாம்மாற்ற இயலாது. இது அவர்களே செய்ய வேண்டிய காரியம்.

முடிவு பெற்ற தொடர் கதை "காதற்கடலை" புத்தக வடிவில் வெளியிடுவீர்களா?

நாங்கள் வெளியிட சற்று தாமத மாகும். ஆனல் இப்பொழுது வேறு யாராவது வெளியிட முன் வருவார் களானல் அதற்குத் தக்க ஏற்பாடு செய்யலாம்.

A. P. கணேசன், அரையபுரம்.

60 வயது கிழவன் மறுமணம் செய்துகொள்ளலாம், 20 வயது வாலிப விதவைப்பெண் மறுமணம் செய்துகொள்ளக்கூடாதா? அவர் களுக்கு விமோசனமேகிடையாதா

மனைவியைஇழந்த ஆடவர், கண வனை இழந்த பெண்ணைத்தான் மறு மணம் செய்துகொள்ள வேண்டும் என்ற சட்டம் வந்தால் நிரந்தர விமோசனம் உண்டு. இன்றுள்ள நிலையில் திடகாத்திரமான, சீர் திருத்தநோக்கங்கொண்ட இளைஞர் கள் முயன்ருல் ஓரளவு இளம் வித வைகள் நிலையை மாற்றலாம்.

A. நாதன், அரையபுரம்.

அக்கரையுடன் படித்தும், பரீ க்ஷையில் பெயில் ஆகிவிடுகிறேன் காரணம் என்ன?

ஞாபகசக்தி குறைவும், பலஹீன மான மூளையும்தான் காரணம். டாக்டரிடம் பரிசோதித்து தகுந்த மருந்து வாங்கிச் சாப்பிடவும்.

சா. இரா. சந்திரன். தஞ்சை.

சென்னைநகரத்தில் ஆந்திரர்கள் அதிகமா? ஏனையோர் அதிகமா?

ஆந்திரர் 100க்கு 18பேர்கூடக் கிடையாது சென்னையில்.

உங்கள்பத்திரிகைக்கு மகிழ்ச்சி எனப் பெயரிட்டதின் நோக்கம் என்ன?

பொருளாதாரத்தால் பலவித இன்னல்களுக்குட்பட்டு அவதியுற் றிருக்கும் மக்கள் வாய்நிறைந்த வார்த்தையாக மாதம் ஒருமுறை 'மகிழ்ச்சி' என்று கூறிப் படித்து மனமகிழ்ச்சியாவதுகொள்ளட்டுமே என்றுதான் என வைத்துக்கொள் ளுங்களேன்.

S. A. கப்பார், சென்னை-2.

தமிழ் மக்களுக்கு தீஞ்சுவைத் தமிழில் கதைகளை அளித்துவந்த 'பொன்னி' இப்பொழுது அம்மாமி கதைகளை வெளியிடத் துணிந்தது ஏன்? அக்கிரகாரத்துக் கதைகளை வெளியிட ஏடுகள் போதாவென்று நினைத்துவிட்டாரா ஆசிரியர்?

இது அவர்கள் சொந்த விஷயம்.

அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆர். செல்லத்துரை, மதுரை.

முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் யார்?

முன்னேற்றம்பற்றி பேச்சளவில் பேசிவிட்டு, செய்கையில் பிற்போக்கில் உள்ளவர்கள்தான்.

பதியை இழந்த பத்தினி, பத்தினியை இழந்த பதி, இவர்களை எதற்கு ஒப்பிடுவது?

அவள் இறகை ஒடிந்த பறவை, அவன் இறகு உதிர்ந்த பறவை. ஒடிந்த இறக்கை ஒட்டாது. ஆனல் உதிர்ந்த இறகு கொஞ்ச காலத்தில் முளைத்துவிடும்.

மு முத்துசாமி,
ஆண்டியக்கவுண்டனூர்.

'சத்தியத்தை உணர்த்தவே புயல் ஏற்பட்டது' என்ற ராஜாஜியின் கூற்று எதை ஒக்கும்?

புருஷன் இறந்தால் எப்படி ஒப்பாரி வைப்பது என்று பழகும் பெண்கள் செயல் போன்றது இவர் கூற்று.

பள்ளிகளில் 'ஜனகணமன' என்ற பாட்டைப் பாடச் சொல்வதின் நோக்கம் யாது?

இந்திய தேசிய கீதம் என அரசினர் பிரகடனம் செய்திருப்பதால் பாடப்படுகிறது.

கரு கோவிந்தன்,
செல்லணக்கவுண்டன்பட்டி.

ஒரு படித்த பெண், ஒரு இளைஞனைக் காதலிப்பது அன்பிற்கா? அழகிற்கா? பணத்திற்கா? இந்தக் காலத்தில் எந்தக் காதல் நீடித்து நிற்கும்?

கடல் நீரைக்கூட அளந்தாலும் அளந்துவிடலாம். ஆனல் இந்தக் கன்னியரின் உள்ளக் காதற்கடல் நீரை அளக்கவேமுடியாது கோவிந்தரே. சினிமா படக் கதையில் வரும் காதல்தான் படம் அழியுமட்டும் நீடித்து நிற்கும்.

டி. பி. நம்பி, பம்பாய்

அறிஞர் அண்ணா 'மகிழ்ச்சி'யில் தொடர்கதை எழுதுவாரா?

எழுதமாட்டார்.

அ. சோணை, மதுரை.

வீட்டில் குழந்தைகள் அடிக்கடி பிறப்பதால் சந்தோஷம் பிறக்கும் என்று ராஜாஜி மதுரையில் கூறினர். இதையே மாதர் மகாநாட்டில் டாக்டர் ராதாகிருஷ்ணன் மறுத்து பேசிஇருக்கிறர். இதில் எதை நம்புவது?

உங்களுக்குத்தெரிந்த இருவகைப் பட்ட குடும்பத்தினரை நேரில் சென்று அவர்களின் அனுபவ உண்மையைக் கேட்டு நம்புங்கள்.

கிடைக்கும்!

குச்சுவீட்டில் போய் பிச்சை கேட்டால் குடிக்கச் சிறிது கஞ்சியாவது கிடைக்கும்.

கிடைக்காது!

ஆனல் பணமாகவே புழங்கும் பேங்கிலோ, ரயில் வே டிக்கெட்அறையிலோ அரைக் காசுகூடக் கிட்டாது பிச்சைக் காரர்களுக்கு.

சென்ற இதழில் "பிரியமுள்ள கணவருக்கு" என்று 'மதராஸ் வாசி' எழுதிய தபாலுக்கு 'விருதைவாசி' பதில் கொடுக்கிறார்.

அன்பு மனைவிக்கு.....

(விருதைவாசி)

ஆருயிர்க் கமலா!

நேற்று நீ படுக்கையில் புறண்டுகொண்டிருந்தாய் கர்ப்பஸ்திரிகளுக்குறிய வேதனைக் குரல் உன் வாயிலிருந்து வந்துகொண்டிருந்தது. நான் பரபரப்புடன் உன்பக்கத்தில் உட்கார்ந்து உன் காலைப் பிடித்துவிட்டேன். என் கை பட்டதும் உன் வேதனைக் குரல் மறைந்தது புன்முறுவல் பூத்தாய். "பெண்களின் காலை புருஷர்கள் பிடிக்கக் கூடாது" என்றாய். சொந்த மனைவியின் காலையும் பிடிக்கக்கூடாதா என்றேன். சிரித்தாய். எழுந்து திரும்பி என் மடியில் தலையை வைத்துப்படுத்தாய். என் வலது கையால் உன் நெற்றியையும் கன்னத்தையும் தடவினேன். ஆஹா! என்ன சுகம். ஆனால் அந்த சுகம் ஒரு நிமிஷத்திற்கு மேல் நீடிக்கவில்லை அதற்குள் கண் விழித்துவிட்டேன். எல்லாம் கனவு. ஜன்னல் பக்கத்திலுள்ள வேப்ப மரத்திலிருந்து காக்கைகள் "கா-கா" என்று கத்தின.

காலையில் தூக்கத்திலிருந்து எழுந்த உடன் காக்கைகளின் குரல்கேட்டால் யாராவதுவிருந்தாளிகள் வருவார்கள் என்று சொல்வதுண்டு. எனக்கு விருந்தாளியாக வர யார் இருக்கிறார்கள்? உன் ஞாபகம்தான் உடனே ஏற்பட்டது. தாய் வீட்டிலிருந்து நீ இன்று எப்படியும் திரும்பிவிடுவாய் என்று நம்பினேன். என் மனமே குதூகலமாக இருந்தது. ரயில் ஒன்பது மணிக்குத்தான் வருமெனத் தெரிந்திருந்தும் நான் எட்டு மணிக்கே ஸ்டேஷனுக்கு போய் விட்டேன். ஒரு மணி நேரம் ஸ்டேஷனில் ஏங்கிக் கிடந்தது தான் மிச்சம்.

நான் வீடு திரும்பியபோது என் மனோநிலை......எப்படி எழுதுவது? ஏதோ பரிகொடுத்தவன் போல வருத்தம், கோபம், ஏக்கம் எல்லாம் என்மனதை குழப்பியது. வீட்டில் வந்தபின்பு வேலையும்ஓடவில்லை. 10 மணிக்குத் தபால்காரன் ஒரு கடிதத்தை கொடுத்துவிட்டுப் போனான். அது உன் கடிதம்தான்.

உன் கடிதத்தில் ஒருபக்கம் அதிருப்தியையும்மறுபக்கம் அன்பையும்காட்டியிருக்கிறாய். அன்பும் அதிருப்தியும் கூடி வாழ்வ

தில்லை. அன்புஇருக்குமிடத்தில் அதிருப்தியிருக்காது. அதுபோல அதிருப்தி இருக்குமிடத்தில் அன்புஇருக்காது. நீயோ படித்த பெண். உனக்குஎல்லாம்தெரியும்.

"படித்த பெண் வேண்டா" மென என்நண்பன் தனிகாசலம் அடிக்கடி சொல்லுவதுண்டு. "படித்த பெண்களெல்லாம் புருஷனுடையபேச்சையும் செய்கையையும் எடை போட்டுப் பார்ப்பதிலேயே பலமணி நேரத்தை வீணுக்குகிறார்கள். தன் படிப்பின் பெருமையை புருஷனிடம் வாதம் புரிவதின் மூலம்தான் காண்பிக்கிறார்கள்" என்றும் என் நண்பன் சொல்லுவான். ஆனால் இதைநான் ஒப்புக்கொள்ளவில்லை

என் நண்பன் தனிகாசலம், மனைவி இறந்த இரண்டாவது மாதமே மறுமணம் செய்து கொண்டதையும், உன் பழைய தோழிபார்வதி புருஷனை இழந்து அந்த ஏக்கத்தில் உடல் நலம் குன்றி நான்கு மாதம் படுத்த படுக்கையாக கிடந்ததையும் கடிதத்தில் எழுதியிருக்கிறாய். நீ எழுதியதின் நோக்கம் எனக்குத் தெரியும். 'பெண்ணுக்கொரு நீதி? ஆணுக்கொரு நீதியா?' என்று கேட்காமல் கேட்கிறாய். கலியாணமான பெண்ணுக்குக் கழுத்தில் தாலி இருப்பதுபோல கலியாணமான ஆணுக்கும் ஏதாவது வேண்டுமென சிலபெண்கள் சொல்வதும் எனக்குத் தெரியும். வாதத்திற்கு இன்னும் எவ்வளவோ பேசுகிறார்கள். ஆனால் பழங்காலத்துப் பழக்கவழக்கமட்டுமல்ல, இயற்கையின் அமைப்பும் பெண்களுக்குச் சாதகமாக இல்லையே! என்ன செய்யலாம்?

சிலசமயம் நான் மௌனமாக இருந்ததைப்பற்றி உன் கடிதத்தில் பிரமாதப்படுத்துகின்றாய். நான் முதல் கடிதத்தில் குறிப்பிட்டதுபோல பெண்கள் பித்து மனப்பான்மையினர்என்பதை நீ இப்பொழுதும் காட்டிவிட்டாய். நான் ஏதாவது சிந்தனையிலிருந்திருப்பேன். அதனால் உன் கேள்விக்கு பதில்சொல்ல கொஞ்சம் சுணங்கியிருக்கலாம். இதற்காக உன்மேல்பிரியமில்லைஎன்று அர்த்தமா? கமலா! ஆறும் இரண்டும் எட்டு என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை நான் உன்மேல் அன்பு வைத்திருப்பதும்.

நிலவில்லாத இரவு. அடிக்கடி பார்ப்பதுதான். நீரில்லாத நதி, தமிழ்நாட்டின் தலைவிதியாகிவிட்டது. ஆனால் நீ இல்லாத வீடு உணவில்லாத வயிறுதான். நீ இல்லாமல் ஒவ்வொருநிமிஷமும் ஒவ்வொரு யுகமாக போய்க் கொண்டிருக்கிறது.

அஞ்சல் நிலையம் இல்லாத காலத்தில்தான் அன்னத்தையும் நாரையையும் தூதுவிட்டார்கள். இப்பொழுது இக்கடிதத்தையே

என் தூதுவனுக நினைத்து உடனே புறப்பட்டு வரவேண்டியது. ஓட்டல் உணவால் என் உயிர் போயிருந்தாலும் பரவாயில்லை ஆனல் என் உயிர் தாளம்போட என் உடல்தான் சிறிது வாடி விட்டது.

உன் கோபம் தணிந்து, மனம் மாறி, உடனே புறப்பட்டு வர வேண்டுமென்பதற்காகவே முதல் கடிதத்தில் நம் பழைய சந்திப்பைப்பற்றி எழுதினேன். அதைப் பார்த்தும் உன் மனம் மாறவில்லை. என் புண்பட்ட நெஞ்சைக் குத்திக் காட்டுவது போல நம்வீட்டிற்கு வாடிக்கையாகவரும் பூக்காரி நேற்று வந்து 'அம்மா இன்னும்வரவில்லையா?' என்று கேட்டாள். அநியாயமாக அவளிடம் என் கோபத்தைக் காட்டினேன்.

உன்பெற்றோர்கள் வார்த்தைக்காக ஒருவாரம் இருந்து வருவதாக எழுதியிருக்கிறய். புருஷனை ஒருவாரம் தவிக்கவிடுவது நியாயமா? இதனுல்தானே சில புருஷர்களும் கெட்டுப்போகிறுர்கள். என்னுல் இனி ஒருநாள்கூட தனிமையாக இருக்க முடியாது உடனேபுறப்பட்டு வா, அல்லது சாவதற்கு மருந்தையாவது அனுப்பிவை.

தேவியை எதிர்கொண்டு
அழைக்க காத்திருக்கும்
கருணுகரன்.

★

கிடைக்கப் பெற்ருேம்

தமிழர் திருநாள்
பொங்கல் இலவச மலர்
பகுத்தறிவுப்பண்ணை, விருதுநகர்.

தைப்பொங்கல்பற்றி அறிஞர்கள் சிலரின் பொன்மொழிகளுடன், வியாபாரிகளின்விளம்பரங்களுக்காகவே வெளியிடப்பட்ட விளம்பர மலர் இது. ஏ.வி.பி.டி. ராசனின் முயற்சி மெச்சத் தகுந்தது.

* * * *

மாதக் காலண்டர்

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தி. மு. க. தலைவர்களின் தோற்றத்துடன்கூடிய 1953ம் ஆண்டுக் காலண்டர் கிடைக்கப் பெற்ருேம். விலை அணு 8.

கிடைக்குமிடம்:
அழகு நூல் இல்லம்,
10, பாட்டர்ஸ் தெரு,
கெல்லீஸ், சென்னை 10.

* * * *

ஸார்ட்டன் அன் கோ.,
ஸ்பார்ட்டன் டைப் பௌண்டரி,
சூளை, சென்னை.

* * * *

தமிழகத்தின் முக்கியகோவில்களின் கோபுரத் தோற்றம் 6 கொண்ட, இரண்டுமாதங்களுக்கு ஒருமுறைகிழிக்கும் காலண்டர்.

ஸ்ரீ லக்ஷ்மி பேப்பர் ஸ்டோர்,
சென்னை.

'கிளர்ச்சி' பொங்கல் மலர்

ஆசிரியர்: இரா.சு. தங்கப்பழம்
திருமங்கலம்—விலை அணா 8

இலங்கை 'நவஜீவன்' ஆசிரியர் T.M.பீர்முகம்மதுவுடன் இன்று தமிழ்நாட்டில் முன்னணி வீரர்களாகத்திகழும் க. அன்பழகன் M. A., சி. பி. சிற்றரசு, M. S. சிவசாமி, N. V. நடராஜன், இரா. இளஞ்சேரன், இரா. சு. நாகரத்தினம், கா. அப்பாத்துரை முதலியோரின், புள்ளி விபரங்களுடன் கூடிய ஆணித்தரமான கட்டுரைகளுடனும், W D துரைசாமி எழுதிய அக்பரின் மகன் சலீமின் காதலி 'அனார்கலி' 'மத வெறி'யர்களால் மர்மக் கொலைக்குள்ளான சரித்திரச் சான்றுகளுடன்கூடிய வரலாறுக் கதையும், 'சந்தேகச்சுழல்' என்ற தலைப்பில் மகிழ்ச்சி சதானந்தம் எழுதியுள்ள இன்றைய படித்த பெண் மக்களின் வாழ்வை யொட்டிய குடும்பக் கதையும் மலரின் கதைப்பகுதியைப் பூர்த்திசெய்கின்றன. "பொங்கல் உறுதி" என்ற மதுரைமன்னனின் கவிதையும் கருத்துடன் அமைந்துள்ளது.

வடநாட்டில் நடைபெறும் குப்பைகூளங்களையெல்லாம் செய்திப்படங்களாக தயாரித்து வெளியிடும் சர்க்கார் அண்மையில் தென்னாட்டில் நிகழ்ந்த பெரும் புயலின் நாசவேலையைப் படம்பிடித்து மக்களுக்குக்காட்டாதது குறித்து "இருட்டடிப்பு இது ஒருவிதம்!" என்ற மு. கருணாநிதியின் கட்டுரை கட்சிபேதமின்றி கவனிக்கவேண்டிய விஷயமாகும்.

தஞ்சைப் பொதுக்குழுவில் கலந்துகொண்ட தி. மு. க. பிரமுகர்களின் புகைப் படங்கள் மலர் நெடுக பரிமளிக்கின்றன. மலர் முகப்பில் 'கிளர்ச்சி' ஆசிரியரும், மு. கருணாநிதியும் உள்ள புகைப்படம் மிளிர்கிறது. இம்மலர் முதன்முயற்சி என்றாலும் சிறப்புடன் வெளிவந்துள்ளது.

* * * *

'பகுத்தறிவு' தை மலர்

ஆசிரியர்: ப. கண்ணன்
சலகண்டபுரம் (சேலம் ஜில்லா)
விலை 8 அணா

தமிழ்நாட்டின் முன்னணி எழுத்தாளர்களின்கதை, கவிதை, கட்டுரைகளுடனும், இளம்எழுத்

தாளர்கள் பலரின் எழுத்தோவியங்களுடனும், பெயருக்கேற்ப பகுத்தறிவுக் கருத்துக்கள் தாங்கி வெளிவந்துள்ளது.

* * * *

கலைக்கதிர் பொங்கல்மலர்

ஆசிரியர்:
ஜி. ஆர். தாமோதரன் M. P.,
பீளமேடு P. O., கோவை.

விஞ்ஞானக் கருத்துக்களை அள்ளித் தெளிக்கும் அருமையான மலர். நாடு முன்னேறவேண்டுமானால் இப்பேர்ப்பட்ட பொருள் பொதிந்த ஏடுகள் போற்றி ஆதரிக்கப்பட வேண்டும்.

* * * *

படிடா தம்பி!

ஆசிரியர்: "தங்கநிழல்"
கோவிந்தகுடி P. O.
(Via) கும்பகோணம்
விலை 1 அணா—பக்கங்கள் 16

இவர்களது 'கத்திக் கப்பல்' என்ற புத்தகம்குறித்து நமது மகிழ்ச்சி 13-2-1951ல் மதிப்புரை வழங்கியபோது "தற்கால வர்ணமெட்டுகளில் அமைத்தால் சிறுவர்கள் வாய்விட்டுப் பாடித் திரிவதுடன் பிறரும் கேட்டுக் களிக்கலாம்" என்று கூறிஇருந்தோம். அதைப் பூர்த்திசெய்து விட்டார்கள் இப்புத்தகத்தின் மூலம். மக்களின் கவனத்தைத் திருப்பிய பலபடங்களின் தேர்ந்த மெட்டுக்களில் மாணவர்களின் அறிவை வளர்க்கும் வகையில் கருத்து நிறைந்த பாட்டுக்களை இயற்றியுள்ளார் ஆசிரியர். மாணவர்கள் தாராளமாக எந்த இடத்திலும் பாடலாம். பள்ளி நாடகங்களில் உபயோகப்படுத்தலாம்.

* * * *

மல்யுத்த வீரர்கள்

ஆக்கம்: மா. சீனிவாசன்
மன்னன் பதிப்பகம், மதுரை.
விலை அணா 2 :: பக்கங்கள் 20
கிடைக்குமிடம்:
செல்வம் பதிப்பகம்,
வெங்கலக்கடைத்தெரு, மதுரை.

உலக மாமல்லர்களான, கிங்காங், தாராசிங், ரஷ்யக்காடி—ஸெர்கிஆர்லாப், கோல்ட்ஸ்டீன், வாங்-பக்-லீ, அலிரிஸாபே, டைகர் கோல்டன் முதலியவர்களின் வாழ்க்கை விளக்கங்கள் சுருக்கமாக தரப்பட்டிருக்கிறது.

* * * *

கலைவாணி பொங்கல்மலர்

ஆசிரியர்: வாணிதாசன்
யாழ்ப்பாணம். (இலங்கை)
விலை 20 சதம்

அறிவிற்கு விருந்தாக பல கவிதை,கதைகள் மிளிர்கின்றன.

* * * *

'பணம்'

திரைப்பட வசனம் பூராவுமாகக் கொண்டு 100பக்கங்களுடன் வெளியிடப்பட்ட புத்தகம்.

விலை 8 அணா
கலாசக்தி பிரசுரம்,
வடக்குமாசிவீதி, மதுரை.

திரைப்பட விமர்சனம்

என் வீடு

இளந்தத்தன்—மதுரை

வசனம்: படம் பார்க்கும் பெரும்பாலான பொது மக்கள் இனிமைத் தமிழ்மணங் கமழும் வசனத்தையே பெரிதும் விரும்புகின்றனர். ஆனல் சாண்டில்யன் எழுதியிருக்கும் வசனம் அத்தகைய வனப்பைப் பெறவில்லை. சிற்சில இடங்களில் சமூகத்திற்குப் பயன்படும் முறையில் வசனம் அமைந்திருப்பதைப் பாராட்டாமலிருப்பதற்கில்லை!

பாடல்கள்: "கொஞ்சுமொழி மைந்தர்களே......" "காலமாம் வெள்ளமதிலே..." என்றபாடல்களும், ராஜகுமாரி பாடும் "நிலையில்லாவாழ்வு இதுதானு" என்ற பாடலும் இனிமையாக இருக்கின்றன, பொங்கல் திருநாளைப் பற்றிய பாடலுடன் விளக்கக் காட்சிகள் சேர்த்திருப்பது மிகவும்போற்றத்தக்கதாகும். தமிழ்ப் படத்தில் அசல் இந்திப் பாடல்கள்இரண்டைச் சேர்த்திருப்பது சிறிதும் அவசியமில்லாததும் மிக மிக வெறுக்கத்தக்கதுமாகும். அதுவும், தமிழ்ப் பாடல்களை இந்தி மெட்டுகளில் அமைப்பதையே விரும்பாத நாகையா, இப்படத்தில் இந்திப் பாடல்களைச் சேர்த்திருப்பது வருந்தத் தக்கது. சிலர் இது "பரந்த மனப்பான்மை" என்று கருதிஞல் அந்தப் பரந்த மனப்பான்மை நாசமாய்ப் போகட்டும். அப்படிப்பட்ட மனப்பான்மையிஞல்தானே நம் தமிழகம் தாழ்ந்திருக்கிறது.

நடிப்பு: நாகையா போற்றத் தக்க முறையிலேயே நடிக்கிருர். ஆரம்பமுதல் இறுதிவரை அவர் நடிப்பு நன்ருகவே அமைந்திருக்கிறது. தம் மக்களின் பாடலைக் கேட்டுஉள்ளமுருகும்பொழுதும் தான் இறந்துவிட்டதாகப் பிரசுரிக்கப்பட்ட செய்தியைப் படிக்கும் கட்டத்திலும் அவர் நடிப்பு மிக உயர்ந்த முறையில் விளங்குகிறது. நாகையாவின் மனைவியாக நடிக்கும் ராஜகுமாரி தன் பாகத்தையுணர்ந்து நடிக்கிருர். தனபாலாகவரும் பாலையா வழக்கம்போல்நன்குநடிக்கிருர். மிடுக்கான பேச்சும், இயற்கையான நடிப்பும் அவரது தனிச் சிறப்புகள். மற்றநடிகர்களின் நடிப்பில் குறிப்பிடத்தக்க பகுதியில்லை.

பொதுவாக: பல பாடல்கள் இனிய மெட்டுகளில் அமையவில்லை. ஒலி, ஒளிப்பதிவுகளில் குறையொன்றுமில்லை. இடைவேளைக்குப்பிறகுதான் படத்தில் விறுவிறுப்பு ஏற்படுகிறது. தன் கணவர் சிவராம் வழக்குமன்றத்தில் உயிருடனிருக்கும் ஆனந்த செய்தியை தனயன் வாயிலாக அறிந்த மனைவி (டி. ஆர் ராஜகுமாரி) களிப்பின் மிகுதியால் ஓடோடிச் சென்று பார்க்காது கடவுளிடம் சென்று வணங்கி, தாலி அணிந்து, பிறகு கணவனைப் பார்க்கப் போவது இயற்கைக்கு முரணான நிகழ்ச்சியையும், டைரக்டரின் பழமைப்பற்றையும் புலப்படுத்துகின்றது. நாகையா, ராஜகுமாரி, பாலையா ஆகியோரின் நடிப்பும், குடும்ப நிகழ்ச்சியை விளக்கும் கதையுந்தான் படத்திற்கு சுமாரான வெற்றி அளிக்கிறது. படத்தில் பல இடங்களில் நமஸ்தே, நமஸ்காரம் என்ற சொற்கள் இடம் பெற்று இறுதியில் வணக்கம் என்று வருவதைப் பார்த்து சிரிப்புதான்வருகிறது. நமஸ்தே நமஸ்காரம் என்பதற்குப் பதிலாக வணக்கம் என்ற சொல்லை வசன ஆசிரியர் பயன்படுத்தியிருந்தால் அவருக்கு ஒருவணக்கம் செலுத்தியிருக்கலாம்! நமஸ்காரம்என்ற சொல்லைவிட வணக்கம் என்ற அசல் தமிழ்ச் சொல் மிக சிறப்பு வாய்ந்தது என்பதை டைரக்டர் உணரவில்லைபோலும்.

குடும்ப நிகழ்ச்சியால் பின்னப்பட்ட 'என் வீடு' ஒருமுறை பார்க்கத்தக்க படமே.

கிடைக்கப்பெற்றோம்

சௌராஷ்டிர மணி

(மாதம் இருமுறை இதழ்)

ஆசிரியர்: P. R. கோவிந்தசாமி

கும்பகோணம்.

தனி இதழ் அணா 2

விருதுநகர் சென்ட்ராலில்

B. R. பந்துலு, மனோஹர், பாலச்சந்திர், P. S. சிவபாக்கியம், S. வரலக்ஷ்மி, கிரிஜா நடித்த

மாமியார்!

இப்பொழுது 2-வது வாரமாக வெற்றியுடன் நடைபெறுகிறது!

நேயர் தபால்

எச்சரிக்கை

முன்னேற வேண்டிய தமிழர் சமுதாயத்திலே, மூடபக்தியைத் தூவிவைத்தனர் முன்னோர்களில் சிலர்! அக்கொடுமையிலிருந்து மீள லட்சியப் பாதையில் ஏறுநடை நடந்து வெற்றி தேடிக்கொண்டிருக்கிறது, அறிஞர் பெரும்படை! அந்த அறிவியக்க பட்டாளத்துக்கு நாடு கடமைப்பட்டிருக்கிறது.

ஆனால், ஒருசில உதவாக்கரைகள், ஊதாரிகள் அறிஞர் பெரும்படையின் சின்னத்தைக் காட்டி, அன்னவர்க்குப் பக்க துணையாக இருப்பதுபோல நடித்துக்கொண்டு இடையிலே 'குல்லூக பட்டரிஸத்தை' அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் குள்ளநரிச் செயல்கள் இனியும் வளர்வது கூடாது.

சமீபத்திலே ஒரு தினசரிப் பத்திரிகையிலே, பராசக்தி, பணம், பூங்கோதை, ஜமீன்தார் முதலிய வசனப் புத்தகங்கள் தயாரிலிருப்பதாகவும், தேவைக்கு எழுதும்படியும் விளம்பரப்படுத்தியிருந்தது காஞ்சியிலிருக்கும் ஒரு கம்பெனி! அதை நம்பி யாராவது ஆர்டரோ முன்பணமோ அனுப்பினால், மக்கள் மன்றத்தில் மதிப்படைந்திருக்கும் அதே ஊர் அறிஞர் புகைப்படத்தை 1 × 32 அளவில் கொண்டு, எட்டு பக்கங்களில் ஏதோ சில காரணமற்ற கட்டுரையை புத்தகமாக்கி, விலை இரண்டணா எனவும் நிர்ணயித்து, எந்தப் புத்தகத்துக்கு 'ஆர்டர்' கொடுத்தாலும் மேற்கூறிய ஒரேவிதமான, காலணாவுக்கு உபயோகமில்லாத அந்தக் குப்பைப் புத்தகத்தையே சர்ட்டிபிகேட் ஆப் போஸ்ட் மூலமோ, V.P. மூலமோ அனுப்பிவைத்துவிடுகின்றனர், அந்தக் காஞ்சீபுரக் கம்பெனியார்!

இந்தமுறை நீடித்தால் முன்னேற்றப்பாதையில் அழகுநடை

(54ம் பக்கம் பார்க்க)

கம்யூனிஸ்டுகளைவிட தேசத்திற்கு மிகவும் கேடு விளைவிக்கக்கூடியவர்கள் ஜாதிவாதிகள் இந்த ஜாதிப்பித்து காங்கிரஸில் கூட தலைதூக்குவதுதான் மிகவும் வருந்தத்தக்கது. பொருளாதார விடுதலையும், சமூக சுபிட்சமும் நமக்கு வேண்டுமானால் யார் எந்த மதம், எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்ற நினைப்புக்கூட வரலாகாது.

—காமராஜ்

ஞாபக சோதனைப் போட்டி 11

[கட்டணம் கிடையாது] முடிவு தேதி: 28—2—53

சரியான விடைக்கு

பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினால் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

1 — ன் — —
2 — — — — காரி
3 — க — — — —
4 — — — ப — — ன்
5 — — க் — — — க —
6 — — யா —
7 — ன — — ஜா — —
8 — — — ப்பெண்
9 — — க்கா —
10 — — ர — —

பெயர்...

விலாசம்...

ஊர்........................ ஜில்லா...

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால், இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களின் பெயர்கள் வரும்.

2 முதல் கூப்பன் அச்சுக் கூப்பனிலும், அதன்பின் தனித் தாளிலும் தேவையானவை ஒருவர் எழுதிபனுப்பலாம். ஆனல் 100 கூப்பன்களுக்கு ஒரு அச்சுக்கூப்பன்வீதம் எழுதப்படவேண்டும்.

3 எவருமே சரியானவிடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

4 28-2-53க்குப்பின் வரும் கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

5 உள்ளூர் வாசிகள் நேரில் கொண்டுவந்து கொடுக்கலாம்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

ஞாபக சோதனைப் போட்டி 10 முடிவு

சரியான விடை

1	பணம்	6	கௌசல்யா பரிணயம்
2	கல்யாணி	7	விசுவாமித்திரா
3	தர்மவீரன்	8	மாயாஜோதி
4	பாக்யலீலா	9	சத்யவாணி
5	கிருஷ்ணபிடாரன்	10	இருசகோதரர்கள்

சரியான விடை எழுதிய கீழ்க்கண்ட ஒருவருக்கே ரூ. 10ம் பரிசளிக்கப்பட்டது.

P. பழனிச்சாமி, 81, பஜார், விருதுநகர்.

ஸ்பெஷல் பரிசு

2 கூப்பன்களே எழுதி ஒரு தப்பு விட்ட கீழ்க்கண்டவருக்கு புத்தகம் ஒன்று ஸ்பெஷல் பரிசளிக்கப்பட்டுள்ளது.

S. அங்குச்சாமி c/o ராமனுதன் பிக்சர்ஸ், காரைக்குடி.

(52ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டு முன்னேறிவரும் அறிஞர் பெரும் படைக்கும், மற்றும் நேர்மையான பத்திரிகைகளுக்கும், பதிப்பகங்களுக்கும் சிரமம் நீடிப்பதோடு இழுக்கும் நேரும் வகையில் இருக்கிறது.

இப்படி ஒருசிலர், கயவாளித்தனமாக நடந்துகொள்வதனுல், மற்ற நேர்மையான பத்திரிகைகளும், பதிப்பகங்களும் பாதிக்கப்படுகிறது என்பதை எடுத்துக் கூறத் தேவையில்லை! அடுத்து அடுத்து அயோக்கியத்தனங்கள் நடைபெறக் கூடாது என்பதற்காகவே இதனை எழுதநேர்ந்தது.

இனியாவது பகற்கொள்ளை பிஸினஸ் முறையை விட்டொழித்து, பதிப்பகங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் மாசு தேடாத முறையில் காஞ்சிபுரம் பப்ளிகேஷன்ஸார் திருந்தி நடந்து கொள்ளட்டும் என்பதற்காகவே முழுப்பெயர், முகவரியைக் கொடுக்கவில்லை என்பதை எச்சரிக்கை மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்!

இன்னும் அந்த இழிநிலையை அவர்கள் கைவிடவில்லையானுல், அவர்கள் வழக்கு மன்றம் ஏற நேரிடும் என்பதையும் எச்சரிக்கை செய்கிறேன்!

—மதுரைமன்னன்

மோகன் டிரேடிங் கார்ப்பரேஷன் **Regd. No. 1819**

திருப்போட்டி-1

முடிவு தேதி: 5—3—53

பரிசு ரூ. **75**
1வது பரிசு ரூ **50**
2வது பரிசு ரூ. **25**

1 திருமலை
2 திரு — — ர்
3 திரு — ள் — ர்
4 திரு — ங்க — ம்
5 திரு — — — — புரம்
6 திருப் — —
7 திரு — — — — குன்றம்
8 திரு — — — மலை
9 திருநா — — வரம்
10 திரு — து — ப் — — டி

பெயர் ....

விலாசம் ....

....

1 கட்டத்திலுள்ள கோடு இட்ட இடங்களைப் பூர்த்தி செய்தால் தென்னாட்டில் திரு என்று ஆரம்பிக்கும் ஊர்களின் பெயர்கள் வரும்.

2 ஒன்றுக்கு மேற்பட்ட முதற்பரிசுஇருந்தால்தொகை பிரித்துக் கொடுக்கப்படும்.

3 பிரவேசக் கட்டணம் முதற் கூப்பனுக்கு அணு 3. அடுத்து ஒவ்வொரு கூப்பனுக்கும் அணு 2 வீதம். ரூ 1க்கு மேற்பட்ட பிரவேசக் கட்டணத்தை M. O. மூலமும், அதற்குக் குறைந்ததை தபால் தலைகளாகவும் அனுப்பலாம். கூப்பன்களுடன் M. O. ரசீது கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும்.

4 சரியான விடை பங்குனி மகிழ்ச்சியில் வெளிவரும். பரிசுபெற்றவர்கள் முழுவிபரம் தெரிய விரும்புபவர் 2 அணு தபால்தலை அனுப்பவும்

5 கூப்பன்களை வெள்ளைக் காகிதத்தில் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் விலாசம் தெளிவாக எழுத வேண்டும்.

6 சரியான விடை யாருமே அனுப்பாவிடில் கூடியவரை சரியான விடைக்கு முதற் பரிசு அளிக்கப்படும்.

7 எங்கள் ஆபீஸ் உள்ள **அருப்புக்கோட்டை, சாத்தூர், சங்கரன் கோவில், கடம்பூர்** நேயர்கள் நேரில் வந்து செலுத்தலாம்.

8 முடிவு தேதிக்குப்பின் வருபவை நிராகரிக்கப்படும்.

9 கூப்பன் அனுப்பவேண்டிய விலாசம் **திருப்போட்டி-1, மோகன் டிரேடிங் கார்ப்பரேஷன், 26-A, கடலைக்காரர் தெரு, விருதுநகர்.**

10 ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

மகிழ்ச்சிக்கும்-இப்போட்டிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. ஆ-ர்

MADRAS

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்
சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்
ராஜா குளுகோ பிஸ்கட்
ராஜா ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

ராஜா பிஸ்கட் கம்பெனி,
115, **திண்டுக்கல் ரோடு, மதுரை.**

உரிமையாளர்: ஆ. சங்குபிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்,
L. V. ஷண்முகம் பிள்ளை, மதுரை.

விருதுநகர் கிளை ஏஜண்ட்:
A. ராமகிருஷ்ணன் 7/321, தெப்பம் மேல்பஜார்.

நேயர்களின் புகைப்படப் போட்டி.



பரிசு பெற்ற படம்.

ஒய்வை நாடும் கதிரவனும்,
உழைப்பாளியும்.

போட்டோ:
V. O. V. P. நாகரத்தினம் - விருதை.

பிரசுரத் தேர்வுபெற்ற படங்கள்.

"மாணவரின் மகிழ்ச்சிப் படகு"

போட்டோ:
கோ. இராசகோபால்
19, செக்கடித் தெரு
கும்பகோணம்



"நீரும் நிழலும்"

போட்டோ:
கே. குமரவேல்
மதுரைக் கல்லூரி
மதுரை

புகைப்படப் போட்டிக்கு படங்கள் அனுப்பினாலே போதும். நெகட்டிவ் அனுப்ப வேண்டியதில்லை. படத்தின் விபரமும், படம் எடுத்தவர் விலாசமும் படத்தின் பின்னால் அவசியம் எழுதியனுப்ப வேண்டும். முதலிடம் பெறும் படத்திற்கு ரூபாய் ஒன்று பரிசு அளிக்கப்படும்.

காரம், குணம், மணம் நிறைந்தது
எங்கும் எப்பொழுதும் கிடைப்பது
பீடி சக்கரவர்த்தி
த.பி. சொக்கலால் ராம்சேட் பீடி

புரோப்ரைட்டர்:
T. P. S. ஹரிராம் சேட்,
த. பி. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழிற்சாலை,
முக்கூடல் P. O. (திருநெல்வேலி ஜில்லா.)

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் நா. சதானந்தம்,
சதானந்தா அச்சகம்-மகிழ்ச்சி இல்லம்-விருதுநகர்